# மேல்நிலை முதலாமாண்டு - வரலாறு தமிழ்வழி
# சிறப்புக்கையேடு

## கிருஷ்ணகிரி மாவட்டம்
## 2024 - 2025

**<u>தலைமை</u>**

**திருமதி. க.பெ. மகேஸ்வரி அவர்கள்**
இணை இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை.

**திரு. முனிராஜ் அவர்கள்**
முதன்மைக் கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒருங்கிணைப்பாளர்கள்

*திரு. நா. ராஜன், மாவட்ட கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி.*
*திருமதி. ஆர்.வி. இரமாதேவி, மாவட்டக்கல்வி அலுவலர், ஓசூர்.*
*முனைவர்.மு.வெங்கடேசன், (முகஅ) நேர்முக உதவியாளர் (மேநிக) கிருஷ்ணகிரி மா.வ.*
*திரு.எஸ்.வடிவேல், உதவி திட்ட அலுவலர் (முகஅ) கிருஷ்ணகிரி மா.வ.*
*முனைவர்.பொ.ஜெ.முரளி, தலைமை ஆசிரியர், அமேநி பள்ளி, பாரூர்.*
*திரு. ச.ஜான் பாக்கியம், உதவி தலைமை ஆசிரியர், ந.நி.பள்ளி, இராசுவீதி, கிருஷ்ணகிரி.*

### பாட ஆசிரியர்கள் குழு

த. திம்மராஜ் - அரசு ஆண்கள் மேநிப,கிருஷ்ணகிரி.
சி. சந்தன் - அரசு பெண்கள் மேநிப,ஓசூர்.
எஸ்.ஆர். பாரதி - அரசு பெண்கள் மேநிப,காவேரிப்பட்டிணம்.
ரா. வரதராஜன் - அரசு மேநிப,நெடுங்கல்.
இரா. உமாதேவி - அரசு பெண்கள் மேநிப,இராயக்கோட்டை.
தி. கவிதா - அரசு பெண்கள் மேநிப,கிருஷ்ணகிரி.
வே. அன்பு - அரசு ஆண்கள் மேநிப,காவேரிப்பட்டிணம்.
பே. சீனிவாசன் - அரசு மேநிப,மத்திகிரி.

ஒரு மதிப்பெண் வினா-விடை

## 1. பண்டைய இந்தியா : தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் .................. எனப்படுகிறது.

அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் ஆ) வரலாற்றுக் காலம்

இ) பழங் கற்காலம் ஈ) புதிய கற்காலம்

2. வரலாற்றின் பழமையான காலம் ................ ஆகும்.

அ) பழங் கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) செம்புக் காலம் ஈ) இரும்புக் காலம்

3. பழங்கற்காலக் கருவிகள் முதன்முதலில் ................ இல் அடையாளம் காணப்பட்டன.

அ) 1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883

4. மத்திய பிரதேசத்தில் உள்ள சோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் -1, பாகோர்-3 ஆகியவை ................ நாகரிகம் நிலவிய இடங்கள்.

அ) கீழ்ப் பழங்கற்காலம் ஆ) இடைப் பழங்கற்காலம் இ) மேல் பழங்கற்காலம் ஈ) புதிய கற்காலம்

5. மெஹர்கார் ................ பண்பாட்டுடன் தொடர்புடையது.

அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) இடைக் கற்காலம் ஈ) செம்புக் காலம்

6. ...................... கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.

அ) க்யூனிபார்ம் ஆ) ஹைரோக்ளைபிக்ஸ் இ) தேவநாகரி ஈ) கரோஷ்டி

7. பர்சஹோம் .................. நிலவிய இடமாகும்.

அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு ஆ) கங்கைச் சமவெளியின் புதிய கற்காலப் பண்பாடு

இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு

8. தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது .................. ஆகும்.

அ) பொ.ஆ.மு. 3000 - 2600 ஆ) பொ.ஆ.மு. 2600 - 1900

இ) பொ.ஆ.மு. 1900 - 1700 ஈ) பொ.ஆ.மு. 1700 - 1500

9. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ................. இருந்தது.

அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்

இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன் பிடித்தல்

10. சிந்து நாகரிகம் ஏறத்தாழ ................. இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.

அ) பொ.ஆ.மு.1800 ஆ) பொ.ஆ.மு.1900 இ) பொ.ஆ.மு.1950 ஈ) பொ.ஆ.மு.1955

## 2. பண்டைய இந்தியா : செம்புக்கால, பெருங்கற்கால, இரும்புக்கால, வேதகாலப் பண்பாடுகள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. வேதப் பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர் ...................

அ) பிராமணங்கள் ஆ) சம்ஹிதைகள் இ) ஆரண்யகங்கள் ஈ) உபநிடதங்கள்

2. மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) குரு-பாஞ்சலம் ஆ) கங்கைச் சமவெளி இ) சிந்துவெளி ஈ) விதேகா

3. ஆதிச்சநல்லூர் .................. மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அ) கோயம்புத்தூர் ஆ) ஈரோடு **இ) தூத்துக்குடி** ஈ) வேலூர்

4. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.

(i) சேனானி - படைத்தளபதி

(ii) கிராமணி - கிராமத் தலைவர்

(iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது

(iv) புரோகிதர் - ஆளுநர்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

அ) i ஆ) ii இ) iii **ஈ) iv**

5. சரியான விடையைத் தேர்வு செய்க.

கூற்று : முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

காரணம் : பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.

**ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.**

இ) கூற்று சரியானது. காரணம் தவறானது.

ஈ) கூற்று காரணம் இரண்டும் சரியானவை.

## 3. பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. புத்தர் தனது முதல் போதனையை .................. இல் நிகழ்த்தினார்.

அ) சாஞ்சி ஆ) வாரணாசி **இ) சாரநாத்** ஈ) லும்பினி

2. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்கும் இடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் .................. ஆகும்.

அ) சீவகசிந்தாமணி ஆ) அச்சராங்க சூத்திரம் இ) கல்ப சூத்திரம் **ஈ) சமனபல சுத்தா**

3. பகவதி சூத்திரம் ஒரு .................. நூலாகும்.

அ) பௌத்தம் **ஆ) சமணம்** இ) ஆசீவகம் ஈ) வேதம்

4. .................. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.

**அ) இரும்பு** ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

5. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு .................. ஆகும்.

அ) கோசலம் ஆ) அவந்தி **இ) மகதம்** ஈ) குரு

## 4. அரசு மற்றும் பேரரசு உருவாக்கம்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ..................

அ) தாமஸ் சாண்டர்ஸ் **ஆ) ஜேம்ஸ் பிரின்செப்** இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

2. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த ..................

**அ) பிம்பிசாரர்** ஆ) அஜாதசத்ரு இ) அசோகர் ஈ) மகாபத்ம நந்தர்

3. ................. என்ற இலங்கையில் கிடைத்த, பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியட் பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.

**அ) மகாவம்சம்** ஆ) தீபவம்சம் இ) பிரமாணம் ஈ) முத்ராராட்சசம்

4. ............... என்ற விசாகதத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை பற்றியும் கூறுகிறது.

**அ) முத்ராராட்சசம்** ஆ) ராஜதரங்கிணி இ) அர்த்தசாஸ்திரம் ஈ) இண்டிகா

5. மெகஸ்தனிஸ் எழுதிய ................ சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத் விவரிக்கிறது.

**அ) இண்டிகா** ஆ) முத்ராராட்சசம் இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்

6. ............... நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.

**அ) அர்த்தசாஸ்திரம்** ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ராராட்சசம்

## 5. தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. கரிகாலன் ................யின் மகனாவார்.

அ) செங்கண்ணன் ஆ) கடுங்கோ **இ) இளஞ்சேட் சென்னி** ஈ) அதியமான்

2. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது.

(i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன் (ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்

(iii) கஜபாகு - இலங்கை (iv) திருவஞ்சிக்களம் - சோழர்

அ) i ஆ) ii இ) iii **ஈ) iv**

3. .................... ராஜசூய யாகத்தை நடத்தினார்.

**அ) பெருநற்கிள்ளி** ஆ) முதுகுடுமிப் பெருவழுதி இ) சிமுகா ஈ) அதியமான்

4. இக்சவாகுகள் .................... பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.

**அ) ஆந்திரா - கர்நாடகா** ஆ) ஒடிசா இ) தக்காணப் பகுதி ஈ) பனவாசி

5. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க

(i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்.

(ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்.

(iii) இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்.

(iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.

**அ) (i) மற்றும் (ii)** ஆ) (ii) மற்றும் (iii) இ) (i) மற்றும் (iii) ஈ) (iii) மற்றும் (iv)

## 6. மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. அலெக்ஸாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் ........................

**அ) செலியுகஸ் நிகேடர்** ஆ) அன்டிகோனஸ்

இ) அண்டியோகஸ் ஈ) டெமெட்ரியஸ்

2. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு .................... தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.

அ) ரோமானிய **ஆ) கிரேக்க** இ) சீன ஈ) பிரிட்டிஷ்

3. வழக்கமான தூதர்கள் மற்றும் கடிதப் பரிமாற்றம் ......................

அ) இந்தியாவிலிருந்து மேற்குக்கான வழக்கமான வணிகத்தைப் பாதித்தது.

**ஆ) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.**

இ) இந்தியாவிலிருந்து கிழக்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

ஈ) மேற்கூறிய எதுவுமில்லை.

4. இந்தோ - கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் ...............

அ) யூதிடெமஸ் ஆ) டெமெட்ரியஸ்

**இ) மினாண்டர்** ஈ) ஆண்டியால்ஸைடஸ்

5. குஷாண நாணயங்கள் ............... நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.

**அ) ரோமானிய** ஆ) கிரேக்க இ) குப்த ஈ) சாதவாகன

6. இந்தோ - கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி ................ என்று குறிப்பிடப்பட்டது.

அ) மதுரா கலை **ஆ) காந்தாரக் கலை**

இ) பாக் கலை ஈ) பாலா கலை

7. கீழ்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?

அ) புத்தசரிதம் - அஸ்வகோஷர்

**ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்**

இ) அர்த்தசாஸ்திரம் - கௌடில்யர்

ஈ) காமசூத்திரம் - வாத்சாயனர்

8. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர் ..................

அ) மொக **ஆ) ருத்ரதாமன்** இ) அஸிஸ் ஈ) யசோவர்மன்

9. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்.

(i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

(ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

அ) (i) சரி ஆ) (ii) சரி

**இ) (i)(ii) இரண்டுமே சரி** ஈ) (i)(ii) இரண்டுமே தவறு.

10. .................... பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

**அ) அரிக்கமேடு** ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்.

## 7. குப்தர்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

அ) இலக்கியச் சான்றுகள் ஆ) கல்வெட்டுச் சான்றுகள்

இ) நாணயச் சான்றுகள் **ஈ) கதைகள், புராணங்கள்**

2. பொருத்துக.

| எழுதியவர் | | இலக்கியப் படைப்பு |
|---|---|---|
| (i) தன்வந்திரி | - | 1. சூரிய சித்தாந்தா |
| (ii) வராஹமிகிரா | - | 2. அமரகோஷா |
| (iii) ஆர்யபட்டர் | - | 3. பிருஹத்சம்ஹிதா |
| (iv) அமரசிம்மா | - | 4. ஆயுர்வேதா |

**அ) 4, 3, 1, 2** ஆ) 4, 1, 2, 3 இ) 4, 2, 1, 3 ஈ) 4, 3, 2, 1

3. ..................... க்கு கவிராஜா என்று பட்டம் அளிக்கப்பட்டது.

அ) முதலாம் சந்திர குப்தர் **ஆ) சமுத்திர குப்தர்**

இ) இரண்டாம் சந்திர குப்தர் ஈ) ஸ்ரீகுப்தர்

4. ..................... என்ற சீனப் பயணி பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

அ) இட்சிங் ஆ) யுவான்-சுவாங் **இ) பாஹியான்** ஈ) வாங்-யுவான்-சீ

5. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரை குகைக் கோயில் இல்லை?

(i) உதயகிரி குகை (ஒடிசா)

(ii) அஜந்தா- எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

(iii) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா)

(iv) பாக் (மத்தியப் பிரதேசம்)

அ) i ஆ) ii **இ) iii** ஈ) iv

6. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் .........................

அ) திக்நாகர் **ஆ) வசுபந்து** இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்

## 8. ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை ..................... என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

**அ) கிரகவர்மன்** ஆ) தேவகுப்தர் இ) சசாங்கன் ஈ) புஷ்யபுத்திரர்

2. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை ..................... அறிவுரையின்படி ஏற்றுக் கொண்டார்.

அ) கிரகவர்மன் **ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்** இ) பிரபாகரவர்த்தனர் ஈ) போனி

3. ..................... என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.

அ) குந்தலா ஆ) பானு **இ) அவந்தி** ஈ) சர்வாகதா

4. கீழ்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?

அ) ஹர்ஷசரிதம் **ஆ) பிரியதர்சிகா** இ) அர்த்த சாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்

5. கீழ்கண்டவற்றுள் தவறானது எது?

அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.

**ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.**

இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப் பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.

ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

## 9. தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

1. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக இணைக்கப்படவில்லை?

   **அ) மூன்றாம் கோவிந்தன் - வாதாபி** ஆ) ரவிகீர்த்தி - இரண்டாம் புலிகேசி

   இ) விஷயம் - ராஷ்ட்டிரகூடர் ஈ) நம்மாழ்வார் - குருகூர்

2. தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

   (i) சிம்ம விஷ்ணு - 1. சாளுக்கிய அரசன்

   (ii) முதலாம் ஜெயசிம்மன் - 2. பல்லவ அரசன்

   (iii) முதலாம் ஆதித்தன் - 3. கப்பல் தளம்

   (iv) மாமல்லபுரம் - 4. சோழ அரசன்

   அ) 4, 3, 1, 2 ஆ) 4, 1, 2, 3 **இ) 2, 1, 4, 3** ஈ) 4, 3, 2, 1

3. காம்போஜம் என்பது நவீன ....................

   அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் **ஈ) கம்போடியா**

4. .................... சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு சமய மையம்.

   **அ) சரவண பெலகொலா** ஆ) மதுரை இ) காஞ்சி ஈ) கழுகுமலை

5. அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோயில்கள் எங்கு உள்ளது?

   அ) ஐஹோல் ஆ) வாதாபி இ) மேகுடி **ஈ) பட்டாடக்கல்**

6. அயல்நாட்டு வணிகர்கள் .................... என்று அறியப்பட்டனர்.

   அ) பட்டணசாமி **ஆ) நானாதேசி** இ) விதேசி ஈ) தேசி

7. ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ....................

   **அ) அத்வைதம்** ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவசித்தாந்தம் ஈ) வேதாந்தம்

## 10. அரபியர், துருக்கியரின் வருகை

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

1. 8 ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின் போது சிந்து அரசர் .................... ஆவார்.

   அ) ஹஜாஜ் ஆ) முகமது - பின் - காஸிம்

   இ) ஜெயசிம்ஹா **ஈ) தாகிர்**

2. கஜினி மாமுது, இந்தியாவுக்குள் ...................... முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினர்.

   அ) 15 **ஆ) 17** இ) 18 ஈ) 19

3. பாலம் பவோலி கல்வெட்டு ...................... மொழியில் இருக்கிறது.

   **அ) சமஸ்கிருதம்** ஆ) பாரசீக மொழி இ) அரபி ஈ) உருது

4. உலகப் புகழ்ப்பெற்ற கஜுராஹோ கோயிலைக் கட்டியவர்கள் ......................

   அ) ராஷ்டிரகூடர் ஆ) டோமர் **இ) சண்டேளர்** ஈ) பரமர்

5. மம்லுக் என்ற பெயர் ஒரு ...................... க்கான அரபுத் தகுதிச் சுட்டாகும்.

   **அ) அடிமை** ஆ) அரசர் இ) இராணி ஈ) படை வீரர்

6. இபின் பதூதா ஒரு .................... நாட்டுப் பயணி.

அ) மொராக்கோ ஆ) பெர்சியா இ) துருக்கி ஈ) சீனா

7. அரசப் பதவியை விடுத்து, தில்லியில் இருந்து விலகி முப்பது ஆண்டுகள் அமைதியில் வாழ்ந்த ஒரே சுல்தான் ....................

அ) முபாரக் ஷா ஆ) ஆலம் ஷா இ) கிசர் கான் ஈ) துக்ரில் கான்

8. சரியாகப் பொருத்தி, விடையைத் தெரிவு செய்க.

(i) ராமச்சந்திரர் - 1. காகதீயர்
(ii) கான்-இ-ஜஹான் - 2. பத்மாவத்
(iii) மாலிக் முஹமத் ஜெய்சி - 3. மான் சிங்
(iv) மன் மந்திர் - 4. தேவகிரி

அ) 2, 1, 4, 3 ஆ) 1, 2, 3, 4 இ) 4, 1, 2, 3 ஈ) 3, 1, 2, 4

## 11. பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. ................ கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.

அ) மூன்றாம் குலோத்துங்கன் ஆ) முதலாம் இராஜேந்திரன்
இ) முதலாம் இராஜராஜன் ஈ) பராந்தகன்

2. ................ படுகையில் இருந்த சோழ அரசின் மையப்பகுதி சோழ மண்டலம் எனப்படுகிறது.

அ) வைகை ஆ) காவிரி இ) கிருஷ்ணா ஈ) கோதாவரி

3. முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் இணைந்து ................ ஆண்டுகள் சோழ அரசை ஆட்சி செய்தார்கள்.

அ) 3 ஆ) 2 இ) 5 ஈ) 4

4. ................ ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.

அ) 28 கி.கி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

5. கெடா ................ இல் உள்ளது.

அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) தாய்லாந்து ஈ) கம்போடியா

6. முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் ................ என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

அ) நாட்டார் ஆ) மாநகரம் இ) நகரத்தார் ஈ) ஊரார்

7. பொருத்துக.

(1) படை முகாம் - படைவீடு
(2) புறக்காவல் படைகள் - தண்டநாயகம்
(3) தலைவர் - நிலைப்படை
(4) படைத்தளபதி - படைமுதலி

அ) 1, 3, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 2, 1, 3, 4 ஈ) 2, 3, 1, 4,

8. ................ இல் பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினார்.

அ) இலங்கை ஆ) வட இந்தியா இ) கேரளம் ஈ) கர்நாடகம்

9. ……………… பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.

அ) மதுரை  ஆ) காயல்பட்டினம்  **இ) கொற்கை**  ஈ) புகார்

10. பொ.ஆ. 800 ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ……………… நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.

அ) மத்திய அரசு  **ஆ) கிராமம்**  இ) படை  ஈ) மாகாணம்

11. வறட்சிப் பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் ……………… ஐக் கட்டினார்கள்.

அ) அகழிகள்  ஆ) மதகுகள்  இ) அணைகள்  **ஈ) ஏரிகள்**



## 12. பாமினி மற்றும் விஜயநகர அரசுகள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. ஹரிஹரர் மற்றும் புக்கர் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தும் முன்பாக ……………… இடம் பணி செய்தனர்.

அ) காகதியர்  **ஆ) ஹொய்சாளர்**  இ) பீஜப்பூர் சுல்தான்  ஈ) யாதவர்

2. கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.

அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்

**ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்**

இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

3. விஜயநகர அரசின் அரச முத்திரை ………………

**அ) பன்றி**  ஆ) புலி  இ) மீன்  ஈ) வில்

4. ……………… என்ற நூலை கங்காதேவி எழுதினார்.

அ) மனுசரிதம்  ஆ) ஆமுக்தமால்யதா

இ) பாண்டுரங்க மகாத்மியம்  **ஈ) மதுரா விஜயம்**

5. ……………… சங்கம வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராகக் கருதப்பட்டார்.

அ) முதலாம் தேவராயர்  **ஆ) இரண்டாம் தேவராயர்**

இ) கிருஷ்ண தேவராயர்  ஈ) வீர நரசிம்மர்

6. கிருஷ்ண தேவராயர் தன் வெற்றிகளின் நினைவாக வெற்றித் தூணை எழுப்பிய இடம்.

அ) பெல்காம்  ஆ) கட்டாக்

**இ) சிம்மாச்சலம்**  ஈ) இராஜமகேந்திரவரம்

7. எந்த இரு பகுதிகளிடையே இடைப்படு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது ………………

அ) சோழ மற்றும் விஜயநகர அரசுகள்  **ஆ) சோழ மற்றும் பாண்டிய அரசுகள்**

இ) சேர மற்றும் பாண்டிய அரசுகள்  ஈ) சோழ மற்றும் சேர அரசுகள்

8. ஷா நாமாவை எழுதியவர் ………………

**அ) பிர்தௌசி**  ஆ) இபன் பதூதா  இ) நிக்கோலோ டி கோண்டி  ஈ) டோமிங்கோ பயஸ்

9. முகம்மது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் ………………

அ) பெரார்  ஆ) பீஜப்பூர்  **இ) பீடார்**  ஈ) அகமது நகர்

10. ……………… கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.

**அ) இராஜா கிருஷ்ணதேவ்**  ஆ) சுல்தான் குலி-குதுப்-உல்-முல்க்

இ) முகமது கவான்  ஈ) பாமண் ஷா

11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) விஜயநகர அரசின் அரசர்கள் ஐந்து வம்சங்களாகச் சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

ஆ) ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் ஒரிசாவின் கஜபதி மற்றும் பாமினி அரசுகள் இடையே கடும் போர் நடைபெற்றது.

**இ) அப்துர் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியில் இருந்த சாமரியின் அவைக்கு வந்தார்.**

ஈ) பாமினி அரசர்கள் அதிக அளவில் தங்க நாணயங்களை பல்வேறு வகையான தெய்வங்களின் உருவங்களுடன் வெளியிட்டனர்.

12. கீழ்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) முதலாம் முகமது ஏற்படுத்திய சிறந்த அரசு அவருக்குப் பின் வந்த சுல்தான்களாலும் மராத்தியர்களாலும் பின்பற்றப்பட்டது.

(ii) கவான் போர்ச்சுகீசிய வேதியியல் நிபுணர்களைக் கொண்டு வெடிமருந்தைத் தயார் செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றைக் கற்றுதரச் செய்தார்.

அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (i) மற்றும் (ii) தவறு

**இ) (i) சரி (ii) தவறு** ஈ) (i) தவறு (ii) சரி

13. கூற்று (கூ) : பாமன்ஷா மிகச்சரியாகத் தாக்குதல் தொடுத்து வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டுதோறும் திறை செலுத்த வைத்தார்.

காரணம் (கா) : இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமன்று.

ஆ) கூற்று சரி, காரணம் தவறு. இ) கூற்றும் தவறு காரணமும் தவறு.

**ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்.**

14. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) அப்துர் ரசாக் | - | 1. ரஷ்யா |
| (ii) நிகிடின் | - | 2. சாளுவ நாயக்கர் |
| (iii) டோமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ் | - | 3. பாரசீகம் |
| (iv) செல்லப்பா | - | 4. போர்த்துகல் |

அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 4, 3 **ஈ) 3, 1, 4, 2**

## 13. பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர் ....................

**அ) ஆதிசங்கரர்** ஆ) இராமானுஜர் இ) இராமானந்தர் ஈ) சைதன்யர்

2. வைதீக வேதப் பிரிவுகளுக்கும், சிரமணப் பிரிவுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களைப் பற்றிக் குறிப்பிடுவது ....................

அ) இராமாயணம் ஆ) பாகவத புராணம்

**இ) திருத்தொண்டர்களின் புகழ் பாடும் தொகுப்புகள்** ஈ) பால லீலா

3. கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர் ....................

அ) முதலாம் மகேந்திர வர்மன் **ஆ) மாறவர்மன் அரிகேசரி**

இ) நரசிம்ம வர்மன் ஈ) சுந்தர பாண்டியன்

4. சமண மதத்திலிருந்த போது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் ....................

அ) அரிசேனா ஆ) தீர்த்தங்கரர் இ) சிவஞான சித்தியார் **ஈ) தர்மசேனர்**

5. பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர் ....................

**அ) இஸ்லாமிய ஞானி** ஆ) பௌத்தத் துறவி இ) இந்துத் துறவி ஈ) சீக்கிய குரு

6. மாதாவாச்சாரியார் .................... தத்துவப் பள்ளியைச் சார்ந்தவர்.

**அ) துவைதம்** ஆ) அத்வைதம் இ) விசிஷ்டாத்வைதம் ஈ) புஷ்டி மார்க்கம்

7. இராமானந்தரின் சீடர் ....................

அ) சைதன்யர் ஆ) மீராபாய் இ) குருநானக் **ஈ) கபீர்**

8. முதன் முதலாக இந்தி மொழியில் தனது மதத் தத்துவப் பிரச்சாரத்தை மேற்கொண்டவர்.

அ) ரவிதாஸ் **ஆ) இராமானந்தர்** இ) கபீர் ஈ) நாமதேவர்

9. அக்பரின் அரசவையில் "ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர்" என்று அறியப்பட்டவர்.

**அ) சூர்தாஸ்** ஆ) துக்காராம் இ) இராமானந்தர் ஈ) மீராபாய்

10. மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் .................... ஆவார்.

அ) இராமானந்தர் ஆ) மீராபாய் இ) சூர்தாஸ் **ஈ) துக்காராம்**

11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) தனது தொடக்கக்கால வாழ்வில் சைவராக இருந்த அப்பர் தனது தமக்கையால் சைவ மதத்திலிருந்து சமண மதத்திற்கு மாறினார்.

**ஆ) சூஃபி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாகக் கருதினர்.**

இ) இராம பக்தியை முன்னிலைப்படுத்தி வங்காள வைணவர்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்றனர்.

ஈ) பௌத்த மத நூல்களில் ரவிதாஸின் பக்திப் பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

12. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.

காரணம் : அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல. ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.

**இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.** ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

13. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (i) | கபீர் | - | 1. சாகித்திய லாகிரி |
| (ii) | சூர்தாஸ் | - | 2. ஷேக் தாதி |
| (iii) | சூபியிஸம் | - | 3. சம்பந்தர் |
| (iv) | கூன்பாண்டியன் | - | 4. நெசவாளர் |

அ) 2, 3, 4, 1 **ஆ) 4, 1, 2, 3** இ) 2, 4, 3, 1 ஈ) 3, 4, 2, 1

## 14. முகலாயப் பேரரசு

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட் போரில், பாபர் .................... யை திறம்பட பயன்படுத்தியதின் மூலம் வெற்றி பெற்றார்

அ) காலாட்படை ஆ) குதிரைப்படை **இ) பீரங்கிப் படை** ஈ) யானைப்படை

2. கடைசிப் போரான காக்ரா போரில் பாபர் ...................... எதிராகப் போரிட்டார்.

**அ) ஆப்கானியர்களுக்கு** ஆ) ரஜபுத்திரர்களுக்கு

இ) துருக்கியர்களுக்கு ஈ) மராட்டியர்களுக்கு

3. ...................... தனது உயரிய அரசியல் மற்றும் இராணுவத் திறமையினால் சௌசாப் போரில் வெற்றி பெற்றார்.

அ) பாபர் ஆ) ஹுமாயூன் **இ) ஷெர்கான்** ஈ) அக்பர்

4. ...................... நிலஉடைமை உரிமை முறையில், நிலத்திற்கான வரியை வசூலிக்கும் பொறுப்பும், அந்நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

**அ) ஜாகீர்தாரி** ஆ) மகல்வாரி இ) ஜமீன்தாரி ஈ) மன்சப்தாரி

5. அக்பரது நிதி நிர்வாகம் ...................... நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

அ) பாபர் ஆ) ஹுமாயூன் **இ) ஷெர்ஷா** ஈ) இப்ராஹிம் லோடி

6. இளவரசர் குஸ்ருவுடன் இணைந்து கலகத்தை தூண்டிவிட்டதற்காக ஜஹாங்கீரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் .................... ஆவார்.

**அ) குரு அர்ஜுன் தேவ்** ஆ) குரு ஹர் கோபிந்த் இ) குரு தேஜ் பகதூர் ஈ) குரு ஹர் ராய்

7. ...................... தனது ஆட்சியின் போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.

அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜகான் **ஈ) ஔரங்கசீப்**

8. கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர் ...................... ஆவார்.

**அ) அக்பர்** ஆ) ஷாஜகான் இ) ஷெர்ஷா ஈ) பாபர்

9. ...................... சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.

அ) ஆக்ராவை **ஆ) குவாலியரை** இ) தில்லியை ஈ) மதுராவை

10. பாதுஷா நாமா என்பது ...................... ன் வாழ்க்கை வரலாறாகும்.

அ) பாபர் ஆ) ஹுமாயூன் **இ) ஷாஜகான்** ஈ) அக்பர்

11. ...................... ஒரு ஜோதிட ஆய்வு நூலாகும்.

**அ) தஜிகநிலகந்தி** ஆ) ரசகங்காதரா இ) மனுசரிதம் ஈ) ராஜாவலிபதகா

12. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் ......................

அ) தாயுமானவர் **ஆ) குமரகுருபரர்** இ) இராமலிங்க அடிகள் ஈ) சிவப்பிரகாசர்

13. தவறான கூற்றினைக் கண்டுபிடி.

அ) இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமியக் கட்டடக்கலையின் பாணியில் முகலாயரின் கட்டடக் கலையின் மறுவடிவமாக தாஜ்மஹால் உள்ளது.

**ஆ) அக்பரது புதிய தலைநகரமான ஆக்ரா மற்றும் அதன் சுற்றுச் சுவர்களுக்குள் பல எழுச்சியூட்டும் கட்டடங்கள் உள்ளன.**

இ) மோதி மசூதி முழுவதும் பளிங்குக்கல்லால் கட்டப்பட்டது.

ஈ) "புராண கிலா" ஒரு உயர்ந்த கோட்டையாகும்.

14. தவறான கூற்றினைக் கண்டுபிடி.

**அ) ஒவ்வொரு மன்சப்தாருக்கும் 1 முதல் 10,000 வரையிலான படை வீரர்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதை ஜாட்டுகள் தீர்மானித்தனர்.**

ஆ) ஷெர்ஷாவின் நாணய முறை, ஆங்கிலேயரின் நாணய முறைக்கு அடித்தளமிட்டது.

இ) முகலாயருக்கும் ராணா பிரதாப் சிங்கிற்கும் இடையே நடைபெற்ற ஹால்டிகாட்டி போர் மிகக் கடுமையான இறுதிப் போர் ஆகும்.

ஈ) சீக்கியப் புனித நூலான "குரு கிரந்த சாகிப்" குரு அர்ஜுன் தேவால் தொகுக்கப்பட்டது.

15. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

(i) ராணா சங்காவின் மூர்க்கமான வலிமை வாய்ந்த படைகள் பாபரின் சக்தி வாய்ந்த படையை எதிர்கொண்டது.

(ii) கன்னோசிப் போருக்குப் பின் அக்பர் நாடு இல்லாத ஒரு இளவரசர் ஆனார்.

அ) (i) சரி ஆ) (ii) சரி **இ) (i) சரி (ii) தவறு** ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

16. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

(i) ஷெர்ஷா மேற்கில் உள்ள சிந்து முதல் வங்காளத்தில் உள்ள சோனர்கான் வரையிலான கிராண்ட் டிரங்க் சாலையை சீர்படுத்தினார்.

(ii) அக்பர் தனது மிகப் பெரிய படையெடுப்புகளின் மூலமாக மாபெரும் பேரரசிற்கு அடித்தளம் இட்டார்.

அ) (i) சரி ஆ) (ii) சரி **இ) (i) மற்றும் (ii) சரியானவை** ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

17. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.

காரணம் : பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.

**அ) கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

ஆ) கூற்று தவறு; காரணம் சரி

இ) கூற்று தவறு; காரணமும் தவறு

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

18. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : ஔரங்கசீப் ஆட்சியின் இறுதியில் முகலாயப் பேரரசின் அழிவு ஆரம்பமாயிற்று.

காரணம் : ஔரங்கசீப் தக்காண அரசர்களிடம் நட்புறவாக இருந்தார்.

**அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல**

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

இ) கூற்று தவறு; காரணம் சரி

ஈ) கூற்று சரி; காரணம் தவறு

19. கீழ்க்கண்டவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.

**அ) பாஸ்கராச்சார்யா - நீதிநெறி விளக்கம்**

ஆ) ஆமுக்தமால்யதா - கிருஷ்ண தேவராயர்

இ) ஜகன்னாத பண்டிதர் - ரசகங்காதரா

ஈ) அல்லசானி பெத்தண்ணா - மனுசரித்திரா

20. பொருத்துக.

(i) அபுல் பாசல் - 1. ஔரங்கசீப்

(ii) ஜும்மா மசூதி - 2. அக்பர்

(iii) பாதுஷாஹி மசூதி - 3. ஷெர்ஷா

(iv) புராண கிலா - 4. ஷாஜகான்

**அ) 2, 4, 1, 3** ஆ) 3, 2, 1, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 1, 3, 2, 4

## 15. மராத்தியர்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

1. வலிமை மிக்க கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றியோர் ..................

   **அ) மராத்தியர்** ஆ) முகலாயர் இ) ஆங்கிலேயர் ஈ) நாயக்கர்

2. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் .................. க்கும் இடையே கையெழுத்தானது.

   அ) அஃப்சல்கான் ஆ) செயிஷ்டகான் **இ) ஜெய்சிங்** ஈ) ஔரங்கசீப்

3. சிவாஜியின் ஆலோசனை சபை .................. என்று அழைக்கப்பட்டது.

   **அ) அஷ்டபிரதானம்** ஆ) அஷ்டதிக்கஜங்கள்

   இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்

4. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக ..................இருந்தார்.

   **அ) நாயக்** ஆ) ஹவில்தார் இ) பர்கிர் ஈ) ஷைலேதார்

5. மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை மேம்படுத்திய பேஷ்வா .................. ஆவார்.

   **அ) முதலாம் பாஜி ராவ்** ஆ) பாலாஜி விஷ்வநாத்

   இ) பாலாஜி பாஜி ராவ் ஈ) இரண்டாம் பாஜி ராவ்

6. .................. கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.

   அ) அஹமது ஷா அப்தலி **ஆ) நாதிர் ஷா**

   இ) ஷுஜா-உத்-தௌலா ஈ) நஜீப்-உத்-தௌலா

7. .................. உடன்படிக்கை முதலாம் ஆங்கிலோ - மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

   அ) மதராஸ் உடன்படிக்கை ஆ) பூனா உடன்படிக்கை

   **இ) சால்பை உடன்படிக்கை** ஈ) பேசின் உடன்படிக்கை

8. இரண்டாவது ஆங்கிலோ - மராத்தியப் போரின் போது ஆங்கிலேய கவர்னர் ஜெனரலாக இருந்தவர் ..................

   அ) காரன்வாலிஸ் பிரபு **ஆ) வெல்லெஸ்லி பிரபு**

   இ) ஹேஸ்டிங்க்ஸ் பிரபு ஈ) டல்ஹௌசி பிரபு

9. கிராம அளவில் வருவாய் வசூலை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை ஏற்றிருந்தவர்.

   அ) தேஷ்முக்கு ஆ) குல்கர்னி இ) கொத்வால் **ஈ) பட்டேல்**

10. மனிதர்களுக்காகவும் மற்றும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க .................. இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.

    அ) சரஸ்வதி மஹால் ஆ) முக்தாம்பாள் சத்திரம் இ) நவ வித்யா **ஈ) தன்வந்திரி மஹால்**

11. கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன?

    அ) குமாரசம்பவ சம்பு ஆ) தேவேந்திர குறவஞ்சி இ) முத்ரராக்ஷஸ்சாயா **ஈ) குமாரசம்பவம்**

12. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

    அ) சிவாஜியை அடக்கும் முக்கிய நோக்கில் 1660 ஆம் ஆண்டு அஃப்சல்கான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

    ஆ) சிவாஜியின் வழித்தோன்றல்களைப் பாதுகாப்பதில் செஞ்சி முன்னணியில் செயல்பட்டது.

    **இ) சிவாஜியின் வருவாய் நிர்வாகம், மனிதாபிமானம் சார்ந்து, உற்பத்திச் செய்பவர்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது.**

    ஈ) சர்தேஷ்முகி என்பது சிவாஜி வசூலித்த 15 சதவிகித கூடுதல் வருவாயாகும்.

13. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) ஆங்கிலேயர்கள் மராத்தியருடன் நட்புறவு கொண்டு தக்காணத்தில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமம் பெற்றனர்.

ஆ) 1749-இல் ஆற்காட்டு நவாப் தோஸ்து அலியை சாஹு தோற்கடித்துக் கொன்றார்.

இ) பேஷ்வாக்களின் கீழ் நீதிமுறை முழுமை பெற்றிருந்தது.

ஈ) தஞ்சை மராத்திய அரசின் போன்ஸலே வம்சத்து கடைசி அரசர் வெங்கோஜி ஆவார்.

14. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சிவாஜியின் கீழிருந்த நீதி நிர்வாகம் பழமையான ஒன்றாகும்.

(ii) நிலையான நீதிமன்றங்களும் விதிமுறைகளும் இருந்தன.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (i) மற்றும் (ii) தவறு

15. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியின் பாதுகாப்பை வீழ்ந்து கொண்டிருந்த முகலாயப் பேரரசு நழுவவிட்டது.

(ii) இது நாதிர் ஷாவின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரியானவை ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

16. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது.

காரணம் : இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று சரி; காரணம் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

17. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : காலாட்படை வீரர்கள் மஹாராஷ்டிராவில் இருந்து மட்டும் தேர்வு செய்யப்பட்டனர்.

காரணம் : மராத்தியர் குதிரைப் படையில் பணியாற்ற விரும்பினர்.

அ) கூற்று தவறு; காரணம் சரி. ஆ) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது.

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை. ஈ) கூற்று மற்றும் காரணம் சரியானவை.

18. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருத்தப்படவில்லை.

அ) சிவாஜி - மலைஎலி ஆ) முதலாம் பாஜி ராவ் - உத்கிர் போர்

இ) தைமூர் ஷா - லாகூரின் வைஸ்ராய் ஈ) தேசிங்கு - செஞ்சி

19. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (i) | அமத்யா | - | 1. அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள் |
| (ii) | சுமந்த் | - | 2. பொது ஒழுக்க நடைமுறைகள் |
| (iii) | பண்டிட் ராவ் | - | 3. போர் மற்றும் அமைதி |
| (iv) | வாக்கிய நாவிஸ் | - | 4. அரசின் அனைத்து பொது கணக்குகள் |

அ) 4, 1, 2, 3 ஆ) 1, 2, 4, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 1, 4, 2, 3

20. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களைக் காலவரிசைப்படி எழுதவும்.

அ) சாம்பாஜி, சாஹு, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி

ஆ) சாம்பாஜி, ராஜாராம், சாஹு, இரண்டாம் சாம்பாஜி

இ) ராஜாராம், சாம்பாஜி, சாஹு, இரண்டாம் சாம்பாஜி

ஈ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹு

# 16. ஐரோப்பியரின் வருகை

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் ...................... ஆகும்.

அ) கோவா ஆ) டையூ இ) டாமன் ஈ) சூரத்

2. மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த துறைமுகம் ......................

அ) டையூ ஆ) கல்கத்தா இ) பம்பாய் ஈ) சூரத்

3. ஆங்கிலேயர் 1639 ஆம் ஆண்டு உள்ளூர் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற நிலத்தில் ...................... கோட்டையைக் கட்டினர்.

அ) புனித ஜார்ஜ் கோட்டை ஆ) புனித வில்லியம் கோட்டை

இ) வேலூர் கோட்டை ஈ) கோல்கொண்டா கோட்டை

4. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர் ......................

அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்

இ) நீனோ டா குன்கா ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

5. ...................... "தமிழ் அச்சுப் பதிப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

அ) இராபர்டோடி நொபிலி ஆ) அல்போன்சோடி அல்புகர்க்

இ) ஹென்ரிக்ஸ் ஈ) பிரான்சிஸ்கோடி அல்மெய்டா

6. அம்பாய்னா படுகொலைக்குக் காரணமானவர்கள் ......................

அ) ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி ஆ) டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி

இ) போர்த்துகீசு கிழக்கிந்தியக் கம்பெனி ஈ) பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி

7. பிரான்சிஸ் மார்ட்டின் என்பவர் ...................... ஐ பிரெஞ்சுக் குடியேற்றங்களின் கேந்திர மையமாக ஆக்கினார்.

அ) மசூலிப்பட்டினம் ஆ) நாகப்பட்டினம் இ) கோவா ஈ) புதுச்சேரி

8. இரண்டாம் சார்லஸ் வரதட்சணையாகப் பெற்ற ...................... ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

அ) மதராஸ் ஆ) கல்கத்தா இ) பம்பாய் ஈ) தில்லி

9. முதலாம் கர்நாடகப் போரின் போது ...................... புதுச்சேரியின் ஆளுநராக இருந்தார்.

அ) பீட்டன் ஆ) லா போர்டோனாய்ஸ் இ) துய்ப்ளே ஈ) மோர்ஸ்

10. ராபர்ட் கிளைவ் ...................... இல் வெற்றி பெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமைபெறச் செய்தார்.

அ) கர்நாடகப் போர்கள் ஆ) ஏழாண்டுப் போர்

இ) பக்சார் போர் ஈ) பிளாசிப் போர்

11. வந்தவாசிப் போர் ...................... க்கிடையே நடைபெற்றது.

அ) அயர்கூட் மற்றும் லாலி ஆ) ராபர்ட் கிளைவ் மற்றும் லாலி

இ) அயர்கூட் மற்றும் புஸ்ஸி ஈ) ராபர்ட் கிளைவ் மற்றும் புஸ்ஸி

12. ஏழாண்டுப் போர் ...................... யுடன் முடிவுக்கு வந்தது.

அ) புதுச்சேரி உடன்படிக்கை ஆ) அலகாபாத் உடன்படிக்கை

இ) பாரிஸ் உடன்படிக்கை ஈ) ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை

13. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

**அ) முகலாயப் பேரரசின் வலிமை குறித்தும், பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர்.**

ஆ) டச்சுக்காரர் ஆங்கிலேயரைத் தொடர்ந்து பம்பாய்க்கு வந்தனர்.

இ) தஞ்சாவூர் முகலாயரால் ஆளப்படும் அரசாக இருந்தது.

ஈ) பம்பாய் முக்கியமான வணிக மையமாக இருந்து, சூரத்தில் இருந்தும் ஒரிசாவில் இருந்தும் வணிகர்களை ஈர்த்தது.

14. கீழ்கண்டவற்றுள் தவறான கூற்றினைத் தேர்ந்தெடு.

**அ) இந்திய அரசர்கள் அயல்நாட்டவரிடம் கொண்டிருந்த ஈர்ப்பினை ஐரோப்பியர்கள் சாதகமாக்கிக் கொண்டனர்.**

ஆ) நறுமணத் தீவுகளில் டச்சுக்காரர் வெற்றி பெற்றனர்.

அ) கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டதற்கு காரணமாக இருந்தார்.

ஈ) புதுச்சேரியில் இன்றளவும் பிரெஞ்சுத் தாக்கத்தைக் காணமுடிகிறது.

15. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) பிளாசிப் போர், வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை, வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக மாற்றியது.

(ii) பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்த இங்கிலாந்து வந்தவாசிப் போருக்குப் பின், வணிக நிறுவனத்தை ஆளுகின்ற சக்தியாக எழுச்சி பெற்றது.

அ) (i) சரி  ஆ) (ii) சரி  **இ) இரண்டும் சரி**  ஈ) இரண்டும் தவறு

16. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) அல்புகர்க் இந்தியாவில் போர்த்துகீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் ஆவார்.

(ii) உடன்கட்டைஏறும் வழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

அ) (i) சரி  ஆ) (ii) தவறு  **இ) இரண்டும் சரி**  ஈ) இரண்டும் தவறு

17. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருகை தந்தனர்.

காரணம் : அவர்களது உண்மையான நோக்கம் ஐரோப்பியச் சந்தைக்குத் தேவையான மிளகு, இலவங்கம், கிராம்பு ஏனைய நறுமணப் பொருட்களை கொள்முதல் செய்வதாகும்.

**அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

ஆ) கூற்று சரி; காரணம் தவறு.

இ) கூற்று தவறு; காரணம் சரி.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

18. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : இந்தியா பொருள் உற்பத்திக்கான வலுவான தளத்தையும், குறிப்பாகப் பருத்தியிழைத் துணிகளுக்காகவும் புகழ் பெற்றிருந்தது.

காரணம் : நாட்டின் முதல் முக்கியமான பொருளாதார நடவடிக்கை விவசாயம் ஆகும்.

**அ) கூற்று மற்றும் காரணம் சரி.**

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

19. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

அ) தரங்கம்பாடி - டேனிஷியர்  **ஆ) சர் தாமஸ் ரோ - பிரெஞ்சுக்காரர்**

இ) அன்வாருதீன் - ஆற்காடு நவாப்  ஈ) அல்புகர்க் - போர்த்துகீசியர்

20. பொருத்துக.

(i) சாமுத்ரி (சாமரின்) - 1. அச்சுப் பதிப்பு
(ii) ஹென்ரிக்ஸ் - 2. ஹைதராபாத் நிஜாம்
(iii) முசாபர் ஜங் - 3. சந்தா சாகிப்
(iv) ஆற்காட்டு நவாப் - 4. கள்ளிக்கோட்டை அரசர்

**அ) 4, 1, 2, 3** ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 4, 3

## 17. ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. ..................... இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் உண்மையில் நிறுவப்படக் காரணமான போராகும்.

அ) பிளாசிப் போர் ஆ) முதலாம் கர்நாடகப் போர்

**இ) பக்சார் போர்** ஈ) வந்தவாசிப் போர்

2. ..................... உடன்படிக்கையினால் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார் மற்றும் ஒரிசாவின் திவானி உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்க நேரிட்டது.

**அ) அலகாபாத்** ஆ) மதராஸ் இ) பூனா ஈ) புதுச்சேரி

3. ..................... வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.

அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆ) டியூப்ளே

இ) காரன்வாலிஸ் **ஈ) ராபர்ட் கிளைவ்**

4. ..................... சட்டம் இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குழு ஆட்சியை முறைப்படுத்தியது.

**அ) ஒழுங்கு முறைச் சட்டம் (1773)** ஆ) பிட் இந்தியச் சட்டம் (1784)

இ) பட்டயச் சட்டம் (1813) ஈ) பட்டயச் சட்டம் (1833)

5. இந்தியாவில் முதல் ஆங்கிலேய அரசப் பிரதிநிதி மற்றும் தலைமை ஆளுநராக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர் .....................

அ) காரன்வாலிஸ் **ஆ) கானிங்** இ) வெல்லெஸ்லி ஈ) ஹேஸ்டிங்ஸ்

6. ..................... ஜமீன்தார்களோடு காரன்வாலிஸ் நிலையான நிலவரி திட்டத்தை மேற்கொண்டார்.

அ) மைசூர் ஆ) பம்பாய் **இ) வங்காளம்** ஈ) சென்னை

7. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் .....................

அ) காரன்வாலிஸ் **ஆ) தாமஸ் மன்றோ**

இ) ராபர்ட் கிளைவ் ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

8. தக்கர்களை அடக்கிய ஆங்கிலேய அதிகாரி .....................

அ) வில்லியம் ஆதம் **ஆ) வில்லியம் ஸ்லீமேன்**

இ) ஜேம்ஸ் ஹாலந்து ஈ) ஜான் நிக்கல்சன்

9. வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின்படி ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம் .....................

அ) நாக்பூர் ஆ) அவத் இ) ஜான்சி **ஈ) சதாரா**

10. நிர்பந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக வரி வசூலிப்பதை ..................... நியாயப்படுத்தியது.

அ) இரயத்துவாரி சட்டம் ஆ) பிட் இந்தியச் சட்டம்

இ) நிலையான நிலவரித் திட்டம் **ஈ) சித்திரவதைச் சட்டம்**

11. .................... இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்தினார்.

அ) காரன்வாலிஸ் **ஆ) வில்லியம் பெண்டிங்**

இ) தாமஸ் மெக்காலே ஈ) தாமஸ் மன்றோ

12. சென்னைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ....................

அ) 1837 ஆ) 1861 இ) 1844 **ஈ) 1857**

13. .................... என்பவரின் முயற்சியால் இந்தியாவில் சதி எனும் உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) வில்லியம் ஜோன்ஸ்

**இ) ராஜா ராம்மோகன் ராய்** ஈ) தயானந்த சரஸ்வதி

14. தென் இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து 1856 இல் இராயபுரத்தில் இருந்து .................... வரை இயக்கப்பட்டது.

அ) வாணியம்பாடி ஆ) காட்பாடி இ) விழுப்புரம் **ஈ) ஆற்காடு**

15. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

**அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

ஆ) துணைப்படைத் திட்டத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவ வளங்களும் செயல்திறனும் குறைந்தன.

இ) வெல்லெஸ்லி பிரபுவால் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் மதரசா (இஸ்லாமிய கல்வி நிறுவனம்) தொடங்கப்பட்டது.

ஈ) டல்ஹௌசி பிரபு மார்ச் 1835 இல் கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்.

16. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : ஆங்கிலேய அரசு அணைகளைக் கட்டுவதற்கானப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டது.

காரணம் : 19 ஆம் நூற்றாண்டில் தொடர்ச்சியாகக் கடைசி கால் நூற்றாண்டில் அதிகமான பஞ்சங்கள் நிலவின.

அ) கூற்று சரி; காரணம் தவறு.

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

**ஈ) கூற்று தவறு; காரணம் சரி.**

17. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?

அ) கங்காதர ராவ் - ஜான்சி

ஆ) ரகுஜி போன்ஸ்லே - நாக்பூர்

இ) ஷாஜி - சதாரா

**ஈ) சிந்தியா - கோலாப்பூர்**

18. பொருத்துக.

(i) ஆர்தர் காட்டன் - 1. சமஸ்கிருத கல்லூரி

(ii) வில்லியம் ஸ்லீமேன் - 2. கொள்ளிடம்

(iii) வில்லியம் பெண்டிங் - 3. தக்கர்களை அடக்குதல்

(iv) காரன்வாலிஸ் - 4. சதி ஒழிப்புச் சட்டம்

அ) 4, 1, 2, 3 **ஆ) 2, 3, 4, 1** இ) 3, 2, ,1, 4 ஈ) 2, 1, 4, 3

## 18. ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள் ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்க கால எதிர்ப்புகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

1. உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமாக கையாண்ட பின் ........................ உண்மையான அரசர் ஆனார்.

   அ) ஹைதர் அலி   ஆ) நஞ்சராஜா   இ) நாகம நாயக்கர்   ஈ) திப்பு சுல்தான்

2. திப்பு சுல்தான் ........................ பகுதியைக் கைப்பற்றியதால் மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் தொடங்கியது.

   அ) கள்ளிக்கோட்டை   ஆ) குடகு   இ) கொடுங்களூர்   ஈ) திண்டுக்கல்

3. பாளையக்காரர் முறை முதன் முதலில் ........................ பேரரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

   அ) விஜயநகர்   ஆ) பாமனி   இ) காகதிய   ஈ) ஹொய்சாள

4. நெற்கட்டும் செவல், வாசுதேவ நல்லூர், பனையூர் ஆகிய புலித்தேவரின் மூன்று முக்கியமான கோட்டைகளை ........................ தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

   அ) மாபுஸ் கான்   ஆ) யூசுப் கான்

   இ) கர்னல் ஹெரான்   ஈ) நபிகான் கட்டக்

5. வேலு நாச்சியார் ........................ அரசருடைய மகள்

   அ) சிவகங்கை   ஆ) புதுக்கோட்டை   இ) இராமநாதபுரம்   ஈ) பழவநத்தம்

6. வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாகக் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் ........................ ஆவார்.

   அ) W.C. ஜாக்சன்   ஆ) A. பானர்மேன்   இ) S.R. லூஹிங்டன்   ஈ) P.A. ஆக்னியூ

7. வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு ........................ ஆகும்.

   அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள்

   ஆ) நவீன சீருடை மாற்றம்

   இ) புதிய தலைப்பாகை

   ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

8. கோல்களின் எழுச்சிக்குக் காரணமானவர் ........................ ஆவார்.

   அ) பின்த்ராய் மன்கி   ஆ) சிடோ   இ) பிர்சா முண்டா   ஈ) கானூ

9. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் - ஜெனரலாக இருந்தவர் .................. ஆவார்.

   அ) டல்ஹௌசி   ஆ) கானிங்   இ) மின்டோ   ஈ) ஜேம்ஸ் அன்ட்ரியூ ராம்சே

10. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது நானா சாகிப்பின் படைகளைத் தோற்கடித்தவர் .................. ஆவார்.

    அ) ஹென்றி லாரன்ஸ்   ஆ) மேஜர் ஜெனரல் ஹேவ்லாக்

    இ) சர் ஹியூக் வீலர்   ஈ) ஜெனரல் நீல்

11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

    அ) வாரன் ஹேஸ்டிங்ஸ், திப்பு சுல்தானை பழிவாங்கும் நோக்கில் அணுகினார்.

    ஆ) திப்புவின் ஆட்சியை அகற்றியதும் மைசூரில் மீண்டும் உடையார் வம்ச ஆட்சி நிறுவியதும் தென்னிந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

    இ) ஆற்காட்டு நவாப் வேலு நாச்சியாருக்கு ஆதரவு அளித்தார்.

    ஈ) திருநெல்வேலி காடுகளின் மையத்தில் காளையார் கோயில் உள்ளது.

12. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.

காரணம் : மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

**இ) கூற்று சரி; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

13. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) | ஜில்லெஸ்பி | - ஸ்ரீரங்கப்பட்டணம் |
| (ii) | மஞ்சி | - பாரக்பூர் |
| (iii) | ஜாக்கோபியன் கழகம் | - வேலூர் கலகம் |
| (iv) | மங்கள் பாண்டே | - சந்தால்கள் |

அ) 1, 2, 3, 4 **ஆ) 3, 4, 1, 2** இ) 3, 2, 1, 4 ஈ) 2, 3, 4, 1

## 19. நவீனத்தை நோக்கி

I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. இந்தியாவில் சீர்திருத்தங்கள் பற்றிய பல கருத்துக்கள் தோன்றிய முதல் மாகாணம் ....................

அ) பஞ்சாப் **ஆ) வங்காளம்** இ) பம்பாய் ஈ) சென்னை

2. "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" .................... ஆவார்.

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி

**இ) இராஜா ராம்மோகன் ராய்** ஈ) ஆத்மராம் பாண்டுரங்

3. தேசிய சமூக மாநாடு .................. முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.

**அ) M.G. ரானடே** ஆ) தேவேந்திரநாத் தாகூர்

இ) கேசவ சந்திர சென் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

4. "வேதங்களை நோக்கி திரும்புக"- என்று முழக்கமிட்டவர் .................... ஆவார்.

அ) இராஜா ராம்மோகன் ராய் **ஆ) தயானந்த சரஸ்வதி**

இ) விவேகானந்தர் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

5. கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகளின் மூலம் .................... தனது கருத்துக்களை விளக்கினார்.

**அ) இராமகிருஷ்ண பரமஹம்சர்** ஆ) தேவேந்திர நாத் தாகூர்

இ) கேசவ சந்திர சென் ஈ) ஜோதிபா புலே

6. "ஒரு பைசா தமிழன்" என்ற வாரப் பத்திரிகையை நடத்தியர் .................... ஆவார்.

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி

இ) இராமலிங்க அடிகளார் **ஈ) அயோத்திதாச பண்டிதர்**

7. பிரம்மஞான சபை .................... இல் நிறுவப்பட்டது.

அ) இந்தியா **ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

இ) பிரான்சு ஈ) இங்கிலாந்து

8. தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் .................... ஆவார்.

அ) இராமலிங்க அடிகளார் ஆ) காசி விசுவநாத முதலியார்

இ) அயோத்திதாச பண்டிதர் ஈ) தேவேந்திரநாத் தாகூர்

9. மேற்கத்திய அறிவியலை அறிமுகப்படுத்த சையது அகமது கான் நிறுவிய அமைப்பு ....................

அ) சத்ய சோதக் சமாஜம் ஆ) சிங் சபா இயக்கம்

இ) அறிவியல் கழகம் ஈ) பிரம்ம ஞான சபை

10. இஸ்லாமிய சமூகத்தினரின் சமய மீளுருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டிருந்த இயக்கம்.

அ) தியோபந்த் இயக்கம் ஆ) அகமதியா இயக்கம்

இ) அலிகர் இயக்கம் ஈ) வாஹாபி இயக்கம்

11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

அ) சுத்தி இயக்கத்தை நிறுவியவர் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்.

ஆ) சத்திய தர்ம சாலை இராமலிங்க அடிகளால் நிறுவப்பட்டது.

இ) இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

ஈ) அகமதியர்கள் பொதுவான மசூதியில் தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டனர்.

12. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

கூற்று : சையது அகமது கான் அலிகரில் நிறுவிய நவீனப் பள்ளி, பின்னர் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.

காரணம் : முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி கற்பதை அவர் விரும்பினார்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

13. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) | ஆங்கிலேய சமயப்பரப்புக் குழு | - 1. சிகாகோ உலகச் சமய மாநாடு |
| (ii) | பார்சி செய்தித்தாள் | - 2. வில்லியம் காரே மற்றும் ஜான் தாமஸ் |
| (iii) | தியோபந்த் இயக்கம் | - 3. ராஸ்ட் கோப்தார் |
| (iv) | விவேகானந்தர் | - 4. முகமது காசிம் நநோதவி |

அ) 3, 2, 1, 4 ஆ) 1, 2, 3, 4 இ) 2, 3, 4, 1 ஈ) 2, 1, 4, 3

## 2 மதிப்பெண் வினா-விடை



1. **வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?**
   - ❖ தொல்லியல் ஆய்விடங்கள், நிலவியல் அடுக்குகள்,
   - ❖ எலும்புகள், கற்கருவிகள், பாறை ஓவியங்கள்

2. **பழங்கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?**

   கீழ் பழங்கற்காலம், இடை பழங்கற்காலம், மேல் பழங்கற்காலம்.

3. **ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக.**
   - ❖ தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றம் உடைய மனித முதாதையர்.
   - ❖ இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

4. **வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.**
   - ❖ வேதங்கள் நான்கு ஆகும்.
   - ❖ ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்களாகும்.

5. **ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.**
   - ❖ 'ஜென்ட் அவெஸ்தா" என்பது பாரசீக நூலாகும்.
   - ❖ வேதகாலம் பற்றிய தகவல்களை தருகிறது.

6. **வேதகாலத்தில் பெண்களின் நிலையைக் கோடிட்டுக் காட்டுக.**
   - ❖ பெண்கள் மரியாதைக்குரிய இடத்தை வகித்தனர்.
   - ❖ வேள்விகளில் கலந்து கொண்டனர்.

7. **நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபிடகங்களை எழுதுக.**
   - ❖ வினய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம்.
   - ❖ இவை பாலி மொழியில் எழுதப்பட்டன.

8. **மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?**
   - ❖ எளிமையான ஒழுக்க வாழ்க்கை முறை.
   - ❖ அகிம்சை, கடவுளின் இருப்பை மறுத்தது,

9. **தமிழ்நாட்டின் பௌத்த வரலாற்றில் நாகப்பட்டினத்தின் முக்கியத்துவத்தை எழுதுக.**
   - ❖ 2ம் நரசிம்ம பல்லவன் பௌத்த கோயிலை கட்டினான்.
   - ❖ சீனத்துறவி பௌத்த கோயிலுக்கு வருகை தந்தார்.

10. **எதன் காரணமாக மகா அலெக்சாண்டர், போரஸின் அரியணையைத் திருப்பித்தந்தார்?**
    - ❖ போரஸின் கன்னியத்தால் ஈர்க்கப்பட்டதால்,
    - ❖ மேலாதிக்கத்தை ஏற்கும் நிபந்தனை பேரில்.

**11. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் பற்றி சிறு குறிப்பு தருக.**

அர்த்த சாஸ்திரம், இண்டிகா, மகாவம்சம்.

**12. பண்டமாற்று முறையை விளக்குக.**

❖ ஒரு பொருளைக் கொடுத்து மாற்றொரு பொருளை வாங்குவது.

❖ எ.டு. அரிசி கொடுத்து மீன் வாங்குவது.

**13. மதுரைக்காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன?**

❖ நாளங்காடி – பகல் நேரக்கடை

❖ அல்லங்காடி – இரவு நேரக்கடை

❖ பாண்டிய மன்னர்கள் பற்றிய செய்திகளை கூறுகிறது.

**14. "யவன" என்ற சொல்லுக்கு பொருள் என்ன?**

❖ இந்தியாவில் இருந்த கிரேக்கர்களை குறிக்கும் சொல்.

❖ பாரசீக மொழியில் இருந்து பெறப்பட்டது.

**15. "சத்ரப்கள்" பற்றி நீவீர் அறிவது யாது?**

❖ சாகர்கள் ஆட்சியில் மாகாண ஆளுநர்கள் சத்ரப்கள்.

❖ சத்ரப்களில் புகழ்பெற்றவர் ருத்ரதாமன்.

**16. பின்வருவன குறித்து ஒரு பட்டியலைத் தயாரிக்கவும்.**

**அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்**

**ஆ) ரோமிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்**

**அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்**

மிளகு, முத்துகள், தந்தம், வைரம், ஆமை ஓடு.

**ஆ) ரோமிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்**

அஞ்சனம், பவழம், தகரம், ஈயம், மதுவகை

**17. ஹூணர் குறித்து நீங்கள் அறிவது என்ன?**

❖ காஸ்பியன் பகுதியில் வாழ்ந்த பழங்குடியினர்,

❖ ரோம பேரரசு வீழ்ச்சிக்கு காரணமானவர்கள்,

**18. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவதை சுருக்கமாக எழுதுக.**

❖ மக்கள் தொகை அதிகம்,

❖ மகிழ்ச்சியாக இருந்தனர்,

❖ குடும்பத்தை பதிவு செய்ய வேண்டியதில்லை.

**19. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.**

❖ சமுத்திர குப்தாரின் சாதனையை கூறுகிறது.

❖ 33 வரிகளைக் கொண்டது.

❖ இதனைப் பொறித்தவர் ஹரிசேனர்.

**20. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை?**

- ❖ மதுபன் செப்புப்பட்டம்,
- ❖ சோன்பட்டு செப்பு முத்திரை
- ❖ நாளந்தா களிமண் முத்திரை.

**21. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்து கூறுக.**

- ❖ பொ.ஆ.949ல் 3ம் கிருஷ்ணன்- ராஜாதித்தனுக்கும் நடைபெற்றது.
- ❖ 3ம் கிருஷ்ணன் வெற்றி.
- ❖ ராமேஸ்வரத்தில் வெற்றித்தூணை நிறுவினார்.

**22. திருபுறம்பியம் போரைப் பற்றி நீ அறிந்தது என்ன?**

- ❖ அபரஜித பல்லவனுக்கும் முதலாம் ஆதித்த சேழனுக்கும் நடைபெற்றது.
- ❖ பல்லவர் ஆட்சி முடிவுற்றது.

**23. ஐஹோல் கல்வெட்டு குறித்து சிறு குறிப்பு வரைக.**

- ❖ இரண்டாம் புலிகேசியின் சாதனைகளை கூறுகிறது.
- ❖ இதனை எழுதியவர் ரவிகீர்த்தி,
- ❖ 19 வரிகளைக் கொண்ட சமஸ்கிருதக் கல்வெட்டு,

**24. முதலாம் இராஜேந்திரனுக்கான பட்டங்கள் யாவை?**

- ❖ முடிகொண்டான்
- ❖ கங்கை கொண்டான்
- ❖ கடாரம் கொண்டான்
- ❖ பண்டிதசோழன்.

**25. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகளைக் கூறுக.**

குழி, மா, வேலி, பட்டி, பாடகம்

**26. தமிழ்ச் சங்கம் குறித்து எழுதுக.**

"இறையனார் அகப்பொருளில்" சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என இடம் பெற்றுள்ளது,

**27. தராப் பற்றி எழுதுக.**

- ❖ பாமன்ஷா தன் ஆட்சிப் பகுதியை நான்கு மாகாணங்களாகப் பிரித்தார்.
- ❖ தனி மாகாண ஆளுநர்ளை நியமித்தார்.

**28. விஜயநகர அரசு யாரால் ஏற்படுத்தப்பட்டது? எதனால் அப்பெயர் வந்தது?**

- ❖ 1336-ல் ஹரிஹரர், புக்கரால் விஜய நகரம் தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ வெற்றியின் நகரம் என்ற பொருளில் விஜயநகரம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

**29. இராமானந்தரின் போதனைகள் யாவை?**

- ❖ கடவுள் முன் அனைவரும் சமம்.
- ❖ சாதி முறை நிராகரிப்பு,

**30. முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக.**

- ❖ மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்,
- ❖ நீதிநெறி விளக்கம்.

**31. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டியது எது?**

- ❖ இப்ராகிம் லோடி நாட்டை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள் அதிருப்தியை ஏற்படுத்தியது.
- ❖ தௌலத்கான் லோடியும், ராணா சங்காவும் வேண்டுகோள் வைத்தது.

**32. சிறு குறிப்பு வரைக. அ) வில்லியம் ஹாக்கின்ஸ். ஆ) சர் தாமஸ் ரோ.**

**அ) வில்லியம் ஹாக்கின்ஸ்.**

ஜஹாங்கீரின் ஆட்சியில் வந்தவர், குடியேற்றம் அமைக்க அனுமதி கோரியவர்.

**ஆ) சர் தாமஸ் ரோ**

முதலாம் ஜேம்ஸ்ன் தூதுவர், சூரத்தில் குடியேற்றம் அமைக்க அனுமதி பெற்றவர்.

**33. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?**

- ❖ சிவாஜி கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக்கொள்ள அனுமதி கிடைத்தது.
- ❖ பீஜப்பூரைக் கைப்பற்ற முகலாயருக்கு சிவாஜி உதவ வேண்டும்.

**34. சிறுகுறிப்பு வரைக. (அ) சௌத் (ஆ) சர்தேஷ்முக்**

அ. கைப்பற்றிய மாவட்டத்தின் வருவாயில் நான்கில் ஒரு பங்கு.

ஆ. தகுதியின் காரணமாக சிவாஜி தனது கூடுதல் வருவாயில் 10%.

**35. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி குறிப்பு வரைக.**

- ❖ நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது,
- ❖ II ம் சரபோஜியால் செறிவூட்டப்பட்டது.

**36. கார்டஸ் (Cartaz) முறை என்றால் என்ன?**

- ❖ போர்த்துகீசியர் வழங்கும் பாதுகாப்பை வணிகர்கள் ஏற்றுக்கொள்ளும் முறை.
- ❖ கடற்கொள்ளையர்களுக்கு எதிராக பாதுகாப்பு வழங்குவதாக கூறினர்.

**37. சராப் மற்றும் உண்டியல் பற்றி நீ அறிவன யாவை?**

- ❖ சராப்' - பணம் மாற்றுவோர்.
- ❖ உண்டியல் - வணிகர்கள் பணமாற்று முறிகளை (Bills of Exchange) வழங்கினர்.

**38. ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றி சிறு குறிப்பு வரைக.**

❖ 1820 ல் சென்னை மாகாண ஆளுநர்.

❖ 1822 ல் இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினார்.

**39. வராகன் (பகோடா) என்றால் என்ன?**

❖ விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம்.

❖ மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமம்,

❖ தமிழில் இதனை வராகன் என்பர்.



**40. சாயில் ரகப் படுகொலை பற்றி சிறு குறிப்பு வரைக.**

❖ சோட்டா நாக்பூர் பகுதியில் முண்டா கிளர்ச்சி.

❖ சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள்.

**41. கான்பூர் படுகொலை குறிப்பு வரைக.**

❖ கான்பூர் கிளர்ச்சிக்குத நானா சாகிப் தலைமை தாங்கினார்.

❖ பெண்களும் குழந்தைகளும் உட்பட சுமார் 125 ஆங்கிலேயர்களும் ஆங்கில அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

❖ அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டது.

**42. சமூக சீர்திருத்தத்திற்கு இராஜாராம் மோகன்ராயின் பங்களிப்புகள் யாவை?**

❖ பலதெய்வ வழிபாடு, உருவ வழிபாடு, சாதிமுறை மூடநம்பிக்கைகள், கண்டனம் செய்தார்.

❖ குழந்தைத் திருமணம், பர்தா முறை, உடன்கட்டை ஏறுதல் ஒழிப்பு.

**43. இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவன யாவை?**

❖ சத்திய தர்ம சாலை ஒன்றை வடலூரில் நிறுவினார்.

❖ அவருடைய பாடல் தொகுப்பு 'திருவருட்பா"

❖ சத்யஞான சபை எனும் அமைப்பை நிறுவினார்.

## 3 மதிப்பெண் வினா-விடை

1. **அச்சூலியன் சோஹானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக.**
   - **அச்சூலியன் மரபு** - கைக்கோடரி வகைக் கருவிகளையும் ,கோடரிகளையும் வெட்டுக்கத்திகளைக் கொண்டது.
   - **சோகனியன் மரபு**- கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளையும், துண்டாக்கும் கருவிகளை கொண்டது.

2. **இடைக்கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் யாவை?**
   - நிரந்தர குடியிருப்புகளில் வசித்தனர்,
   - இறந்தோரைப் புதைத்தார்,
   - நுண்கற்கருவிகள் கொண்டு வேட்டையாடினர்.

3. **ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள் குறித்து நீங்கள் அறிந்தது என்ன?**
   - இயற்கையை வழிபட்டனர்,
   - இறந்தோரைப் புதைத்தனர்,
   - இறப்பிற்கு பின்னரான வாழ்க்கை மீதான நம்பிக்கை

4. **ரிக்வேத கால சமூகப்பிரிவுகள் யாவை?**
   - பிராமணர்கள்
   - சத்திரியர்கள்
   - வைசியர்கள்
   - சூத்திரர்கள்.

5. **மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.**
   - ரிக் வேதத்தில் "காவிஸ்தி' என்னும் சொல் பசுக்களைத் தேடுவதாகும்.
   - கால்நடைகள் சொத்தாகவும், புனிதமானதாகவும் கருதப்பட்டது.
   - கால்நடைகளை மையப்படுத்திய மோதல்கள் நடந்தன.

6. **கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்கள் யாவை?**
   - வேளாண் உபரி.
   - கைத்தொழில் மற்றும் வணிக வளர்ச்சி.
   - பெருகிக் கொண்டிருந்த மக்கள்தொகை.

7. **இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு வளர்ச்சி பெற்ற நகரங்கள் பற்றி எழுதுக.**
   - அரசியல், நிர்வாக மையங்கள் - ராஜகிருகம், சிராவஸ்தி, கௌசாம்பி, சம்பா
   - வணிக மையங்கள் - உஜ்ஜையினி, தட்சசீலம்.
   - புனிதத் தலங்கள் - வைசாலி

8. **தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.**

❖ பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டில் சமணம் தமிழ்நாட்டில் பரவியது.

❖ நாலடியார்,பழமொழி, நீலகேசி - தமிழின் முக்கியமான சமண நூல்கள்

❖ வஜ்ரநந்தி என்பவரால் ஒரு திராவிட சமணச் சங்கம் நிறுவப்பட்டது.

9. **இந்தியாவில் மகா அலெக்சாண்டர் படையெடுப்பின் தாக்கங்களை குறிப்பிடுக.**

❖ மேற்குலகிற்கு வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன.

❖ இந்தியாவுக்கும் கிரேக்கத்திற்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டது.

❖ சந்திரகுப்த மௌரியர் மகத அரியணையைக் கைப்பற்ற உதவியது.

10. **அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன?**

❖ அசோகர் ஆட்சியில் எட்டாவது ஆண்டில் கலிங்கத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டார்.

❖ மகதப் பேரரசிலிருந்து பிரிந்து சென்ற கலிங்கத்தைத் தண்டிப்பதற்காக படையெடுத்தார்.

❖ இதில் 10,000 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயம் அடைந்தனர்.

11. **சோழ அரசர்களில் தலை சிறந்தவன் கரிகாலன் – விளக்குக.**

❖ பட்டினப்பாலை கரிகாலன் ஆட்சியைப் பற்றி கூறுகிறது.

❖ வெண்ணி போரில் - சேரரையும், பாண்டியரையும், 11 வேளிர்களை வெற்றி கொண்டார்.

❖ காவிரியின் குறுக்கே கல்லணை கட்டினான்.

12. **கௌதமிபுத்திர சதகர்னியின் சாதனைகள் யாவை?**

❖ சாதவாகன அரசர்களுள் தலை சிறந்தவர் கௌதமபுத்ர சதகர்னி

❖ நாசிக் கல்வெட்டு இவரது சாதனையை கூறுகிறது.

❖ அஸ்வமேத யாகத்தை நடத்தினார்.

13. **கிழார்- வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?**

**கிழார்**

❖ பழங்குடி சமூகத்தின் தலைவர்.

❖ கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவன்.

**வேளிர்**

❖ குறுநில மன்னர்கள்

❖ வளம் நிறைந்த மலைப்பாங்கான காட்டுப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

**14. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது." எவ்வாறு?**

- ❖ சங்கப் பாடலில் முசிறி பற்றிய குறிப்பு இடம் பெற்றிருந்தது.
- ❖ நாட்டின் அரிசி ஏற்றிவந்த படகுகள், திரும்பி மீன்களை ஏற்றிச் சென்றன.
- ❖ கருமிளகு, தங்கத்திற்கு பண்டமாற்று செய்யப்பட்டது.

**15. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள் குறிப்பு வரைக.**

**எல்லோரா**

- ❖ ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கைலாசநாதர் கோவிலாகும்.
- ❖ முதலாம் கிருஷ்ணரின் காலத்தில் ஒரே பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டது.

**எலிஃபெண்டா**

- ❖ எல்லோரா சிற்பங்களை விட மேன்மை கொண்டவை.

**16. புகழ்பெற்ற சைவ மூவர்கள் யாவர்?**

- ❖ திருநாவுக்கரசர் (அப்பர்),
- ❖ திருஞானசம்பந்தர்,
- ❖ சுந்தரர்,
- ❖ மாணிக்கவாசகர்

**17. மாலிக் காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.**

- ❖ 1307 - தேவகிரி கோட்டையை கைப்பற்றினார்.
- ❖ 1309 - வாரங்கல்லின் - காகதீய அரசர் பிரதாப ருத்ரதேவரை தோற்கடித்தார்.
- ❖ 1310 - ஹொய்சாள அரசர். மூன்றாம் வீரவல்லாளனை தோற்கடித்தார்.
- ❖ 1311 - பாண்டியர் தலைநகரம் மதுரையை சூறையாடி ஏராளமான செல்வத்துடன் தில்லி திரும்பினார்.

**18. இராஜேந்திர சோழன் கடாரம் கொண்டான்" என அழைக்கப்படுவது ஏன்?**

- ❖ ஸ்ரீ விஜயாவை வெற்றிக் கொண்டார்.
- ❖ குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவும் (கடாரம்) இராஜேந்திரனால் தோற்கடிக்கப்பட்டது.
- ❖ இராஜேந்திரனுக்கு கடாரம் கொண்டான்' என்ற பட்டம் சூட்டப்பட்டது.

**19. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் என்னென்ன?**

| | | |
|---|---|---|
| இறை, | காணிகடன், | இறை கட்டின காணிகடன், |
| கடமை, | குடிமைவரி, | ஒப்படி. |

**20. தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக்கோவில்கள் யாவை?**

| | | |
|---|---|---|
| பிள்ளையார்பட்டி, | திருமயம், | குன்றக்குடி, |
| திருச்செந்தூர், | கழுகுமலை, | கன்னியாகுமரி, |
| சித்தன்னவாசல். | | |

**21. நாயக்க முறை குறிப்பு வரைக.**

- இராணுவத்தலைவர், அல்லது இராணுவவீரர் என்ற பொருள்.
- காகத்திய ஆட்சியில் தொடங்கப்பட்டு விஜயநகர ஆட்சியில் வளர்ச்சி பெற்றது.
- விஜயநகர அரசில் இராணுவ சேவைக்குப் பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகுதிகளை வழங்கும் முறை.

**22. ராக்சஷி தங்கடி (தலைக்கோட்டை) போர் குறிப்பு வரைக.**

- ஜனவரி 23, 1565 இல் தலைக்கோட்டை அல்லது ராக்சஷி -தங்கடி போர் நடைபெற்றது.
- தக்காண சுல்தான்களுக்கும் ராமராயருகும் இடையே நடைபெற்றது.
- போரின் இறுதிக் கட்டத்தில் விஜயநகரம் தோல்வியடைந்தது.
- ராமராயர் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**23. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?**

- அலாவுதீன் பாமன் ஷா
- தான் பெற்ற வெற்றிகளை நினைவுகூறும் வகையில் தன் நாணயங்களில் தன் பெயரை இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக்கொண்டார்.

**24. கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.**

- ஹைதராபாத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.
- மலை மீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும்.
- ரகசிய நிலத்தடிச் சுரங்கப்பாதை உள்ளது.

**25. கபீரின் போதனைகளை விவரி.**

- உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதிமுறையை கைவிடப்பட வேண்டுமென கூறினார்.
- இஸ்லாமிலிருந்த சம்பிரதாயங்களை விமர்சித்தார்.
- இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிக்கும் தடைகளை உடைக்க முயன்றார்.

**26. பக்தி இயக்கத்தின் விளைவுகளை சுட்டிக் காட்டுக.**

- முக்தி என்பது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது.
- பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்கள் தோன்றின.
- துவைதம், அத்வைதம் ஆகிய தத்துவக் கோட்பாடுகள் தோன்றின
- பண்டிகைகள், விழாக்கள் நடத்துவது, புனிதப் பயணங்கள் செல்வது, ஆகியன நடைமுறையில் உள்ளன.

27. **"தீன் இலாஹி" பற்றி நீவிர் அறிவது யாது?**

- ❖ அக்பர் 1582-இல் தீன் இலாஹி என்ற புதிய தத்துவத்தை வெளியிட்டார்.
- ❖ அக்பர் பல்வேறு மத ஞானிகளோடு விவாதத்தில் கலந்து கொண்டு உண்மை அறிய முயன்றார்.
- ❖ தீன் இலாகி என்ற சொல்லின் நேரடிப் பொருள் "தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடு' ஆகும்.

28. **அக்பரது மன்சப்தாரி முறை குறிப்பு வரைக.**

- ❖ அக்பர் மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார்.
- ❖ மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறைக்கு மன்சப்தாரி முறை என்று பெயர்.
- ❖ ஜாட் - ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும்.
- ❖ சவார் - மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

29. **கபீரின் போதனைகளை விவரி.**

- ❖ பக்தி இயக்கத்தின் மிக முக்கிய ஆளுமை கபீர் ஆவார்.
- ❖ இவர் நெசவுக் குடும்பத்தைச் சார்ந்தவர்.
- ❖ முழுமையான ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைத்தார்.
- ❖ உருவவழிபாட்டையும், சடங்குகளையும், சாதிமுறையையும் கண்டித்தார்.

30. **அபுல் பாசல் – குறிப்பு வரைக.**

- ❖ அக்பரின் அரசவைப் புலவர் அபுல் பாசல்.
- ❖ அக்பர் நாமா' என்னும் நூலில் அக்பரின் வரலாற்றை அபுல் பாசல் தொகுத்து வழங்கியுள்ளார்.
- ❖ முகலாய நிர்வாகத்தைப் பற்றி அவர் அயனி அக்பரியில் விவரித்துள்ளார்.

31. **மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள் யாவை?**

- ❖ மராத்தியர் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளை தாக்கும் ஆற்றலில் சிறந்து விளங்கினார்கள்.
- ❖ கொரில்லா தாக்குதல் முறை அவர்களை வலிமையாகத் திகழச் செய்தது.
- ❖ பக்தி இயக்கம் மூலமாக மராத்தியரிடம் ஒற்றுமை உணர்வு மேலோங்கியது.
- ❖ தக்காணப் பகுதியில் சிதறிக் கிடந்த மராத்தியரை ஒன்றுதிரட்டி சிவாஜி ஒரு வலுவான அரசை நிறுவினார்.

32. **மூன்றாவது மராத்தியப் போரின் விளைவுகள் யாவை?**

- ❖ பேஷ்வா முறையை ரத்து செய்து அனைத்து பகுதிகளையும் இணைத்துக் கொண்டனர்.
- ❖ இரண்டாம் பாஜிராவ் வருடாந்திர ஓய்வூதியத்தின் கீழ் சிறைக்கைதி ஆனார்.
- ❖ மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

**33. பழவேற்காடு – குறிப்பு வரைக.**

- ❖ சென்னை நகருக்கு வடக்கே 60 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- ❖ டச்சுக்காரர் ஜெல்டிரியா என்னும் பாதுகாப்புக் கோட்டையைக் கட்டினர்.
- ❖ டச்சுக்காரரின் அதிகார பீடமாக இருந்தது.
- ❖ குடியேற்றங்களை 1610இல் நிறுவினர்.

**34. தரங்கம்பாடி – குறிப்பு வரைக.**

- ❖ 1620 நவம்பர் 20 ஒப்பந்தத்தின் படி டேனியர்கள் தரங்கம்பாடியில் கோட்டை கட்டினர்.
- ❖ சீகன்பால்கு ஓர் அச்சுக்கூடத்தை நிறுவினார்.
- ❖ தரங்கம்பாடி 1845இல் ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டது.

**35. ஆம்பூர் போர் (1749) – குறிப்பு வரைக.**

- ❖ ஹைதராபாத் நிஜாமிற்கு உரிமை கோரிய முசாபர் ஜங் நாசிர் ஜங்கும்,
- ❖ கர்நாடக அரியணைக்கு உரிமை கோரிய சந்தா சாகிப் அன்வாருதீன் இடையே ஆம்பூர் போர் நடைபெற்றது.
- ❖ ஆம்பூர் போரில் சந்தா சாகிப் படைகளால் அன்வாருதீன் கொல்லப்பட்டார்.
- ❖ பிரெஞ்சுப்படைகளால் நாசிர் ஜங் கொல்லப்பட்டார்.

**36. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு – குறிப்பு வரைக**

- ❖ இவர் புதுச்சேரியில் மாபெரும் வணிகர்
- ❖ பிரஞ்சு ஆளுநரின் தலைமை துபாஷியாகவும், வணிக முகவராகவும் பணியாற்றினார்.
- ❖ இவரது நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலப் பகுதியின் மதிப்புமிக்க வரலாற்றுச் சான்றாகும்.

**37. இரட்டை ஆட்சிமுறை குறிப்பு வரைக.**

- ❖ அறிமுகப்படுத்தியவர் இராபர்ட் கிளைவ்.
- ❖ கம்பெனி முழு அதிகாரத்தையும் தன்வசம் வைத்துக்கொள்ளும்.
- ❖ நிர்வாகச் சுமையை மட்டும் நவாபிடம் விட்டுக் கொடுத்தது.
- ❖ இந்த நிர்வாக முறையே இரட்டை ஆட்சிமுறை.

**38. வாரிசு உரிமை இழப்புக் கொள்கை குறிப்பு வரைக.**

- ❖ இந்து சம்பிரதாயப்படி, வாரிசில்லாத மன்னர் ஓர் ஆண் மகனை வாரிசாக தத்தெடுக்க முடியும்.
- ❖ ஆனால் பிரிடிஷ் அரசுக்கு கட்டுப்பட்ட ஒரு சிற்றரசு வாரிசை தத்தெடுக்க மறுக்கும் போது அது பிரிடிஷ் அரசு பகுதியோடு இணைக்கப்படும்.
- ❖ வாரிசு உரிமை இழப்புக் கொள்கை யின் கீழ் முதலில் வீழ்ந்த அரசு சதாரா ஆகும்.

**39. காரன்வாலிஸின் நீதித்துறை நிர்வாகம் பற்றி நீவிர் அறிவது என்ன?**

- ❖ ஆட்சியர்களை நீதி வழங்குவதிலிருந்து விடுவித்தார்.
- ❖ குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் சீரமைக்கப்பட்டன.
- ❖ நீதித்துறையின் உச்சங்களாக சதர் திவானி அதாலத்தும், சதர் நிஜாமத் அதாலத்தும் திகழ்ந்தன.
- ❖ நீதியில் உச்சபட்ச மேல் முறையீட்டு நீதிமன்றம் கல்கத்தாவில் அமையப்பெற்றது.

**40. சார்லஸ் உட் அறிக்கை குறிப்பு வரைக**

- ❖ சார்லஸ் உட்கல்வி அறிக்கை (1854) வெளியிடப்பட்டது.
- ❖ ஆரம்பக்கல்வி முதல் உயர்நிலைப் பள்ளி, கல்லூரிப் படிப்பை உள்ளடக்கியது.
- ❖ பொதுக் கல்வித்துறை துவங்கப்பட்டது.
- ❖ 1857-இல் சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன

**41. பிண்டாரிகள் மற்றும் தக்கர்கள் குறிப்பு வரைக.**

**பிண்டாரிகள்**

- ❖ மத்திய இந்தியாவில் வாழ்ந்த கொள்ளை கூட்டத்தினர்.

**தக்கர்கள்**

- ❖ தில்லிக்கும் ஆக்ராவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த கொள்ளைக்கூட்டத்தினர்.
- ❖ வில்லியம் ஸ்லீமேனை 1860ஆம் தக்கர்களை முடிவுக்கு கொண்டு வந்தார்.

**42. 1806-ஆம் ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக.**

- ❖ சிப்பாய்கள் சாதி, மதத்தின் அடையாத்திற்கு தடை செய்தது.
- ❖ அக்னியு சிப்பாய்களுக்கான புதிய தலைப்பாகை அறிமுகம் செய்தது.
- ❖ வேலூர்க் கோட்டையில் 1806 ஜூலை 10ல் புரட்சி வெடித்தது.

**43. 1857-ஆம் ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?**

- ❖ கானிங்பிரபு இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் முதல் வைஸ்ராயுமாவார்.
- ❖ கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் குழுவும், கட்டுப்பாட்டு வாரியமும் கலைக்கப்பட்டன.
- ❖ வாரிசு இழப்புக் கொள்கையும் நாடிணைப்புக் கொள்கையும் கைவிடப்படும்.
- ❖ இந்திய அரசர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கைகளை ஏற்றுக் கொண்டது.

**44. எம்.ஜி.ரானடே – குறிப்பு வரைக.**

- ❖ பிரார்த்தனை சமாஜம் அமைப்பிற்கு வலிமை சேர்த்தார்.
- ❖ விதவை மறுமணச் சங்கம், தக்காணக் கல்விக் கழகத்தை நிறுவினார்.
- ❖ சமபந்தி விருந்து, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம் போன்ற சமூக பணிகளில் கவனம்.

45. **சுவாமி விவேகானநதர் – குறிப்பு வரைக.**

- ❖ இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா.
- ❖ கல்வியறிவும் பேச்சாற்றலும், ஆன்மீக தோற்றமும், ஆளுமையும் அவருக்கு நாடு முழுவதும் சீடர்களை உருவாக்கியது.
- ❖ 1893இல் சிகாகோவில் நடைபெற்ற உலகச்சமய மாநாட்டில் பங்கு பெற்றார்.



# 5 மதிப்பெண் வினா-விடை

1. **சிந்து நாகரிகம் என் "ஹரப்பா நாகரிகம்" என அழைக்கப்படுகிறது?**

- ➢ இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலும் பாகிஸ்தானிலும் தோன்றிய நாகரிகம்.
- ➢ "சிந்து நாகரிகம்" அடையாளம் காணப்பட்ட முதல் இடம் "ஹரப்பா".
- ➢ இது "ஹரப்பா நாகரிகம்" என்று அழைக்கப்படுகிறது.
- ➢ ஒரு நகரப் பண்பாட்டிற்கான முதிர்ச்சி ஹரப்பாவின் காலத்தில் இருந்தது.
- ➢ சார்லஸ் மேசன் ஹரப்பாவிற்கு முதன் முதலில் 1826ல் வருகை தந்தவர்.

2. **திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.**

- ➢ நகரங்கள் அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை கொண்டது.
- ➢ நன்கு திட்டமிடபபட்ட தெருக்கள் சந்துகள், கழிவுநீர்வசதி.
- ➢ வீடுகள் சேற்று மண்ணாலான செங்கற்களால் கட்டப்பட்டன.
- ➢ உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம்.
- ➢ அது கோட்டைப் பகுதியாகவும், தாழ்வான நகரமாகவும் இருந்தன.
- ➢ பெரும் குளம் என்பது முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய குளமாகும்.
- ➢ இது மொஹஞ்சதாரோவில் உள்ளது.

3. **தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.**

- ➢ ஆதிச்சநல்லூர் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- ➢ ஆண்டிரு ஜாகர் இங்கு அகழ்வாய்வை மேற்கொண்டார்.
- ➢ பையம்பள்ளி என்ற கிராமம் வேலூர் மாவட்டத்தில் உள்ளது.
- ➢ இந்திய தொல்லியல் துறை பையம்பள்ளியில் அகழ்வாய்வை நடத்தியது.
- ➢ கொடுமணல் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது.
- ➢ அகழாய்வில் ரோமானிய நாணய குவியல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**4. புத்தரின் எண் வழி பாதையை விவரி,**

- துன்பத்திலிருந்து விடுதலைப் பெற "புத்தர்" எண் வழிப் பாதையை காட்டினார்.
- எண் வழிப்பாதை "மத்திமப்பாதை" எனவும் வழங்கப்படுகிறது.

**எண் வழிப்பாதை:**

1 நன்னம்பிக்கை

2 நல்ல ஆர்வம்,

3 நல்வாய்மை,

4 நற்செயல்

5 நல்வாழ்க்கை

6.நன் முயற்சி

7 நற்சிந்தனை

8. நல்ல தியானம்

**5. வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.**

- ரிக்வேத காலத்தில் அரசர் "ராஜன்" என அழைக்கப்பட்டார்.
- ராஜனின் முக்கிய பணி இனக்குழுவை காப்பது.
- சபா, சமிதி, விததா என்ற அமைப்புகள் செயல்பட்டன.
- மத குருமார்கள் அரசருக்கு அறிவுரை வழங்கினர்.
- சேனானி என்பவர் படைத் தலைவராவார்.
- அரசனுக்கு வழங்கப்பட்ட வரி "பலி" எனப்பட்டது.
- கிராமங்களின் தலைவர் "கிராமணி" ஆவார்.

**6. மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும்.**

- கலிங்கத்து கல்வெட்டுகள் கலிங்கப் போரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
- அசோகரின் 14 பாறைக் கல்வெட்டுகள் முக்கியச் சான்றாகும்.
- விசாகதத்தரின் "முத்ராராட்சசம்" என்ற நூல் சந்திரகுப்தர் அரியணையில் அமர்ந்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
- கௌடில்யர் எழுதிய "அர்த்தசாஸ்திரம்" மௌரியப் பேரரசைப் பற்றிக் கூறுகிறது.
- தொல்லியல் கண்டுபிடிப்புகள் நகர மையங்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றன.

**7. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.**

- மௌரியப் பேரரசு பற்றி அறிய முக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன.
- இதுவரை 33 கல்வெட்டுக் கட்டளைகள் கிடைத்துள்ளன.
- அவை 14 பாறைக் கல்வெட்டுகள் இரண்டு கலிங்கக் கல்வெட்டுகள்.
- 7 தூண் கல்வெட்டுக் கட்டளைகள்,சில சிறு பாறை கல்வெட்டுகள் ஆகியன.
- வடக்கே நேபாளம் முதல் தெற்கே கர்னூல் வரை அசோகரின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.
- இந்த கல்வெட்டு கட்டளைகள் பெரும்பாலும் "பிராமி எழுத்து" முறையிலும் உள்ளன.
- சில கல்வெட்டுகள் "மகதி" மற்றும் "பிராகிருதத்திலும்" உள்ளன.

**8. மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பை விவரிக்கவும்?**

- இரும்புக் கால கட்டத்தில் தொடக்க கால வேந்தர்கள் உருவாயினர்.
- மேய்ச்சல் நிலங்கள், வேளாண் நிலங்கள் மீதும் தங்கள் கட்டுப்பாட்டை வைத்ததின் மூலம் "வேந்தர்" என்ற நிலையை அடைந்தனர்.
- மற்றவர்கள் தலைவர்களாகவே (வேளிர்) நீடித்தனர்.
- கீழார்களையும் வேளிர் குல தலைவர்களையும் "வேந்தர்கள்" அடிபணிய செய்தனர்.
- மூவேந்தர்கள் புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்து போற்றினர்.

**9. களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?**

- பொ.ஆ 300-600 இடைப்பட்ட காலம் களப்பிரர் காலம்.
- சங்க காலத்திற்கும் பல்லவர், பாண்டியர் காலத்திற்கு இடைப்பட்ட காலம்
- மூவேந்தர்களை தோற்கடித்து தமிழகத்தில் இடைக்கால ஆட்சியை ஏற்டுத்தினார்கள்.
- களப்பிரர்களின் ஆட்சியை "இருண்ட காலம்" என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.
- களப்பிரர்கள் காலத்தில் திருக்குறளும், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் இயற்றப்பட்டன.
- பூலாங்குறிச்சி கல்வெட்டு 5-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்தது.
- "சேந்தன்", "கூற்றன்" என்ற இரு அரசர்களின் பெயரை குறிப்பிடுகின்றன.
- பாண்டியர்களால் களப்பிரர்கள் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**10. பொ.ஆ. 1-ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்களை தருக?**

- தக்காணப் பகுதியில் சாதவாகன ஆட்சி நிறுவப்பட்டது.
- மாகாண ஆட்சியர்கள் தன்னாட்சி உரிமை பெற்றிருந்தனர்.
- தமிழ் பகுதியின் அரசியல் நிலப்பரப்பு சிறு சிற்றரசுகளாக துண்டுப்பட்டிருந்தது.
- மதுரையை தலைநகராகக் கொண்டு "பாண்டியர்கள்" ஆட்சி செய்தனர்.
- உறையூரை தலைநகராக் கொண்டு "சோழர்களும்"
- வஞ்சியிலிருந்து "சேரர்கள்" என முவேந்தர்களால் தமிழ் பகுதி ஆளப்பட்டது.

**11. குப்தர் காலம் பண்டைய "இந்தியாவின் பொற்காலம்" விவாதிக்கவும்?**

- குப்தர்கள் கால குடைவரை கோயில்கள் அஜந்தா, எல்லோரா, பாக், உதயகிரி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- கல் சிற்பக் கலைக்குச் சிறந்தச் சான்று சாரநாத்தில் உள்ள புத்தர் சிலை
- நாளந்தாவில் உள்ள புத்தரின் 18 அடி செம்புசிலை.
- குப்தர்களின் சுவர் ஓவியங்கள் அஜந்தா, பாக், பாதாமி ஆகிய இடங்களில் காணப்படுகிறது.
- காளிதாசர் எழுதிய சாகுந்தலம் மாளவிகாக்னிமித்ரம் விக்ரமோர்வசியம் புகழ்பெற்ற நாடக நூல்கள் ஆகும்.
- மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்கள் இறுதி வடிவம் பெற்றன.
- சுழியம் ('0') கண்டுபிடித்தது குப்தர்கள் காலம் ஆகும்.
- "பூமி ஒரு அச்சில் தன்னைத் தானே சுற்றுகிறது" என்பதைக் கண்டுபிடித்த முதல் வானவியலார் ஆர்யபட்டர் ஆவார்.

**12. பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகளை விவாதி?**

- தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல்கடந்த வணிகத்தில் ஈடுபட்டடனர்.
- மாமல்லபுரம் ஒரு முக்கிய துறைமுகமாக விளங்கியது.
- பல்லவர்களிடம் கப்பல் படையும் இருந்தது.
- மாமல்லபுரம் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் கப்பல் தளங்களைக் கட்டினர்.
- வெளிநாட்டு வாணிகத்தில் நறுமண பொருள்கள், பருத்தி ஆடைகள், விலையுயர்ந்த கற்கள், மூலிகைகள் ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.

**13. மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக?**

- ராஜசிம்மனின் ஆட்சிக்காலத்தில் மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் கட்டப்பட்டது.
- இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது.
- தென்னிந்தியாவில் கட்டுமான கோவில்களில் இது முதன்மையானதாகும்.
- ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோவிலாகும்.
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் இக்கோவிலின் சிறப்புப் பண்பாகும்.
- பல்லவர்களின் அடையாளமாக "கடற்கரைக் கோவில்" கருதப்படுகிறது.

**14. இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?**

- இரண்டாம் தரெய்ன் போர் 1192ஆம் ஆண்டு நடைபெற்றது.
- இரண்டாம் தரெய்ன் போரில் கோரி முகமதுவிடம் பிரித்விராஜ் தோல்வி அடைந்தார்.
- இறுதியில் பிரித்விராஜ் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- இராஜ துரோகக் குற்றம் சாட்டி, அவரைக் கொன்றார்.
- இந்திய வரலாற்றின் திருப்பு முனையாக இப்போர் அமைந்தது
- போரில் வெற்றி பெற்ற கோரி முகமது தனது தளபதியான குத்புதின் ஐபக்கை இந்திய பகுதிக்கான துணை ஆட்சியாளராக நியமித்தார்.
- இதனால் இந்தியாவில் முதன்முதலாக இசுலாமியர்கள் ஆட்சி ஏற்பட்டது.

**15. சோழர் கால கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக.**

- முதலாம் இராஜராஜ சோழனின் ஆட்சியில் தஞ்சாவூர் பெரியக் கோவில் கட்டப்பட்டது.
- இக்கோவில் பிரகதீசுவரர் ஆலயம் என்றும் அழைக்கப்படுகிறது.
- முதலாம் இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டினார்.
- இரண்டாம் இராஜராஜனால் "தாராசுரம் கோயில்" கட்டப்பட்டது.
- இக்கோவில் சோழர் கால கட்டுமானக் கோவிலுக்கு சிறந்த உதாரணமாகும்.

16. **கோவில் -ஒரு சமூக நிறுவனம், இக்கூற்றை நிறுவுக.**

- சோழர் காலத்தில் கோவில்கள் சமூக திருவிழாக்கள் நடைபெறும் ஒரு சமூக நிறுவனமாக இயங்கின.
- கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவை கோவில்கள் மூலம் வளர்க்கப்பட்டன.
- கோவில்களில் பாடப்பட்ட வழிபாட்டு பாடல்கள் வாய்மொழி கல்வியை வளர்த்ததாக கூறப்படுகிறது.
- எண்ணெய் ஆட்டுபவர்கள் கோவில்களுக்கு எண்ணெய் வழங்கினர்.
- வேதம், இசை, கலைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்ததால் கோவில்கள் ஒரு கல்வி நிறுவனமாக விளங்கின.

17. **பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.**

- ஒரு கடவுள் கொள்கையை போதித்தனர்.
- பிறப்பு, இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட முடியும் என நம்பினர்.
- குரு என்பவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.
- உலக சகோதரத்துவத்தை போதித்தனர்.
- உருவ வழிபாடு, சாதிமுறையை, கண்டனம் செய்தனர்.
- மனிதர்களும், உயிரினங்களும் "கடவுளின் குழந்தைகள்" எனக் கூறினர்.
- ஆழ்ந்த பக்தியுடன் மக்களின் மொழிகளில் பாடல்கள் இயற்றினர்.

18. **"வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" விளக்குக?**

- "விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான்" என ஷெர்ஷா நம்பினார்.
- "நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையை" ஷெர்ஷா பின்பற்றினார்.
- நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு, வளத்திற்கு ஏற்ப வரி நிர்ணயம் செய்யப்பட்டன.
- வணிகத்தை ஊக்குவிப்பதற்கு வணிக வரிகளை எளிமைப்படுத்தினார்.
- தங்கம், வெள்ளி, செப்பு காசுகளின் தர அளவு வரையறுக்கப்பட்டது.
- ஷெர்ஷாவின் நாணயமுறையானது முகலாயர் காலத்திலும் பின்பற்றப்பட்டது.

**19. சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்தது?**

- சிவாஜி நிலையான இராணுவத்தைக் கொண்டிருந்தார்.
- படை வீரர்களுக்கு வீடு, ஊதியம் வழங்கப்பட்டது.
- கொரில்லாப் போர் முறையில் வீரர்கள் சிறந்து விளங்கினர்.
- ரெஜிமெண்டுகள்" "பிரிகேடுகள்" என காலாட்படை பிரிக்கப்பட்டது.
- ஒன்பது வீரர்களைக் கொண்ட சிறிய படை பிரிவுக்கு நாயக் தலைமை வகிப்பார்.
- "சாரி நௌபத்" குதிரைப்படையின் தலைமைத் தளபதி ஆவார்.

**20. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது ?**

**வாரன் ஹேஸ்டிங்ஸ்**

ஒரு மதராசாவை உருவாக்கியதே பிரிட்டிஷார் கல்விக்கு ஆற்றிய முதல் தொண்டு ஆகும்.

**காரன்வாலிஸ்**

வாரணாசியில் ஒரு 'சமஸ்கிருத கல்லூரியை நிறுவினார்.

**ஹேஸ்டிங்ஸ்**

கல்கத்தாவில் 1817-ஆம் ஆண்டு இந்து கல்லூரியை நிறுவினார்.

**வில்லியம் பெண்டிங்**

கல்கத்தா மருத்துவ கல்லூரியை துவக்கினார்.

மெக்காலே கல்விக்குழு ஆங்கில வழிக் கல்வியை ஆதரித்து பரிந்துரைத்தது.

**டல்ஹௌசி**

தாய்மொழிக் கல்வி முறைக்கு ஆதரவு கொடுத்தார்.

கல்வி சேவையில் ஈடுபட்ட தனியாருக்கு மானியம் வழங்கினார்.

சார்லஸ் உட் கல்வி அறிக்கை 1854-ல் வெளியிடப்பட்டது.

**21. 1806-ஆம் ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும். போக்கினையும் விவரிக்கவும்?**

- சமய சின்னங்கள் அணிய தடை செய்யப்பட்டன.
- அக்னியூ, சிப்பாய்களுக்கு புதிய தலைப்பாகையை அறிமுகம் செய்தார்.
- இதனால் 1806-ஆம் ஆண்டு ஜுலை 10ஆம் நாள் வேலூர் கோட்டையில் இப்புரட்சி தோன்றியது.
- இப்புரட்சியில் 13 அதிகாரிகள், 82 கீழ்நிலை இராணுவ வீரர்கள் இறந்தார்கள்.
- கர்னல் கில்லஸ்பியால் வேலூர் புரட்சி உடனடியாக அடக்கப்பட்டது.
- மைசூர் இளவரசர்கள் கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

22. **1857-ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும்?**

**புரட்சிக்கான காரணங்கள்**

- டல்ஹௌசியின் வாரிசு உரிமை இழப்புக் கொள்கை மூலமாக அவத், ஜான்சி இணைக்கப்பட்டது.
- ஆயிரக்கணக்கான கைவினைஞர்கள், ஆடைகள், நகைகள் செய்வோர் வாழ்விழந்தனர்.
- ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர்.
- சதி ஒழிப்புச்சட்டம், விதவை மறுமணச் சட்டம் போன்றவற்றால் மத உணர்வுகள் பாதிக்கப்பட்டன.
- என்பில்டு துப்பாக்கியின் தோட்டாக்களில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டது.
- இதனால் இந்து, முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன.

**புரட்சியின் விளைவுகள்**

- 1858 நவம்பர் 1-ல் "விக்டோரியா ராணியின் பிரகடனம்" வெளியிடப்பட்டது.
- கானிங் பிரபுவால் அலகாபாத்தில் வாசிக்கப்பட்டது.
- அவரே இந்தியாவின் கடைசி கவர்னர், முதல் வைஸ்ராய் ஆவார்.
- இந்தியர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும், மதிப்பதாக உறுதியளித்தது.

23. **தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக?**

**ஸ்ரீ வைகுண்ட சாமிகள்**

- தென் திருவிதாங்கூரில் சாஸ்தா கோவில்விளை என்ற ஊரில் 1809-இல் பிறந்தார்.
- விலங்குகளை பலியிடும் பழக்கத்தையும் கைவிடும்படி வலியுத்தினார்.
- பல சாதிகளை சேர்ந்த மக்கள் பங்கேற்கும் சமபந்தி விருந்துகளை ஏற்பாடு செய்தார்.

**இராமலிங்க அடிகள்**

- சிதம்பரத்திற்கு அருகில் பிறந்து, சென்னையில் வாழ்ந்தார்.
- மனம் உருகும் பாடல்களை இயற்றினார்.
- வடலூரில் சத்திய தர்மசாலையை நிறுவி ஏழைகளுக்கு உணவளிக்கத் தொடங்கினார்.
- அவரின் பாடல் தொகுப்புகள் "திருவருட்பா' என அழைக்கப்பட்டது.

**அயோத்திதாச பண்டிதர்**

- ஒரு சுதேசி மருத்துவராக தொழில் செய்தார்.
- 1890-களில் ஆதி திராவிடர்களிடையே இயக்கத்தைத் தொடங்கினார்.
- ஆதி திராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றார்.
- 1908-முதல் ஒரு பைசாத் தமிழன் என்ற பெயரில் வாராந்திர பத்திரிகையை நடத்தினார்.


காலக்கோடு
முகலாயப் பேரரசு (பாபர்)
அளவு திட்டம்
1 CM = 10 ஆண்டுகள்
இங்கு 1 CM (அ) 1 சிறுகோடு ஓர் ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது.
1520
1530
1526 முதலாம் பானிபட் போர்
1527 கான்வா போர்
1528 சந்தேரிப் போர்
1529 காக்ராப் போர்
1530 பாபர் இறப்பு


காலக்கோடு
மராத்திய பேரரசு ((சிவாஜி ) 1660-1680)
அளவு திட்டம்
1 CM = 10 ஆண்டுகள்
இங்கு 1 CM (அ) 1 சிறுகோடு ஓர் ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது.
1660
1670
1680
1664 சிவாஜி சூரத் நகரைத் தாக்குதல்
1665 புரந்தர் உடன்படிக்கை
1669 ஜாட் கலகம்
1670 சிவாஜி சூரத் நகரைத் தாக்குதல்
1674 சிவாஜி முடிசூட்டப்படுதல்
1680 சிவாஜியின் இறப்பு


காலக்கோடு
ஆங்கில ஆட்சியின் விளைவுகள் 1660-1680)
அளவு திட்டம்
1 CM = 10 ஆண்டுகள்
இங்கு 1 CM (அ) 1 சிறுகோடு ஓர் ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது.
1750
1760
1770
1775
1756 மூன்றாம் கர்நாடகப் போர் ஆரம்பம்
1757 பிளாசிப் போர்
1760 வந்தவாசிப் போர் / உத்கிர் போர்
1761 மூன்றாம் பானிப்பட் போர்
1764 பக்சார் போர்
1769 மதராஸ் உடன்படிக்கை
1773 ஒழுங்குமுறைச்
1775 I ஆங்கிலேய-மராத்தியப் போர் ஆரம்பம்


இந்தியாவில் ஐரோப்பிய வணிகத் தளங்கள்
வ
மே
கி
தெ
● வணிகத் தளங்கள்
டே–டேனியர்
ட–டச்சுக்காரர்
ஆ–ஆங்கிலேயர்
பி–பிரெஞ்சுக்காரர்
போ–போர்த்துகீசியர்
ஆக்ரா (ஆ)
பாட்னா (ஆ)
சின்சுரா (ட)
அகமதாபாத் (ஆ)
ஹுக்ளி (ஆ)
புரோச் (ஆ)
சந்தன்நகர் (சந்திரநாகூர்) (பி)
சூரத் (ஆ)
டையூ (போ)
டாமன் (போ)
கல்கத்தா (ஆ)
பாலசோர் (பி)
தாராபூர் (போ)
மும்பை (ஆ)
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
ஏனாம் (பி)
கோவா (போ)
மசூலிப்பட்டினம் (ட)
பழவேற்காடு (ட)
சென்னை (ஆ)
கண்ணூர் (போ)
புதுச்சேரி (பி)
மாஹி (பி)
தரங்கம்பாடி (டே)
காரைக்கால் (பி)
கள்ளிக்கோட்டை (போ)
நாகப்பட்டினம் (ட)
கொச்சின் (போ)
லட்சத் தீவுகள் (இந்தியா)
இலங்கை


அக்பரின் கீழ் முகலாயப் பேரரசு
காபூல்
காஷ்மீர்
காந்தகார்
லாகூர்
முல்தான்
பானிப்பட்
தில்லி
ஆக்ரா
லக்னோ
அஜ்மீர்
அலகாபாத்
பீகார்
பாட்னா
மாளவம்
வங்காளம்
குஜராத்
கோண்டுவானா
காண்டேஷ்
பெரார்
ஒரிசா
டையூ
அகமதுநகர்
அரபிக்கடல்
கோல்கொண்டா
பீடார்
வங்காள விரிகுடா
பீஜப்பூர்
கோவா
நெல்லூர்
கள்ளிக்கோட்டை
லட்சத் தீவுகள் (இந்தியா)
பாளையக்காரர்
மதுரை
இலங்கை
இந்தியப் பெருங்கடல்
அளவையில் இல்லை
LVQ8S2
வ
மே
கி
தெ


ஔரங்கசீப் பேரரசு
காபூல்
பெஷாவர்
காஷ்மீர்
பானிப்பட்
தில்லி
ஆக்ரா
ரஜபுத்திரர்
அஜ்மீர்
அலகாபாத்
பாட்னா
மாளவம்
குஜராத்
வங்காளம்
அசிர்கர்
அகமதுநகர்
டையூ
மும்பை
கோண்டுவானா
புரந்தர்
பீஜப்பூர்
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
கோவா
வேலூர்
செஞ்சி
கள்ளிக்கோட்டை
தஞ்சாவூர்
கொச்சின்
பாளையக்காரர்
இலங்கை
வ
மே
கி
தெ


மகாஜனபதங்கள்
காம்போஜம்
காந்தாரம்
குரு
மத்ஸ்யம்
பாஞ்சாலம்
கோசலம்
சூரசேனம்
மல்லம்
வஜ்ஜி (விரிஜி)
சேதி
வத்சம்
காசி
அங்கம்
மகதம்
அவந்தி
அஸ்மகம் (அசகம்)
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
வ
மே
கி
தெ


குப்தப் பேரரசு
யுவதேயர்கள்
இந்திரபிரஸ்தம்
கோசலம்
மதுரா
கபிலவஸ்து
அர்ஜுனாயனர்கள்
மாளவர்கள்
குசிநகரம்
மாண்டசார்
அயோத்தி
பிரயாகை
நாளந்தா
ராஜகிருகம்
உஜ்ஜயினி
காசி
கயா
வல்லபி
சாஞ்சி
பர்ஹுட்
கிர்னார்
தாம்ரலிப்தி
மகாகோசலம்
அஜந்தா
எல்லோரா
கலிங்கம்
வாகடகர்கள்
பூரி
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
நாகார்ஜுனகொண்டா
வெங்கி
ஸ்ரீசைலம்
அமராவதி
பல்லவர்கள்
காஞ்சி
சோழர்கள்
சேரர்கள்
தஞ்சாவூர்
மதுரை
பாண்டியர்கள்
இலங்கை
பிரம்மபுத்திரா
வ
மே
கி
தெ